வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 03.08.2023 வியாழக்கிழமை இதழ் : 236 பக்கங்கள் : 15

# ரணில் போட்டியிடுவாராயின் அவரை நிராகரிக்க முடியாது!

## அமைச்சர் பந்துல பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 03

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவாராயின் அவரை நிராகரிப்பதற்குக் காரணங்கள் எதுவும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு இன்னும் வெளிவரவில்லை. ஆனால், ஆளுங்கட்சியில் உள்ள ஒரு சிலர் முந்திக்கொண்டு மேடைகளில் ஏறி ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவாராயின் அவரை நிராகரிப்பதற்குக் காரணங்கள் எதுவும் இல்லை.

வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீட்டெடுத்து வரும் ஒரு தலைவராக அவர் விளங்குகின்றார். இந்தநிலையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் யார் வேட்பாளர் என்பதை சிறீ லங்கா பொதுஜன பெரமுன அறிவிக்கும். அதுவரை அனைவரும் பொறுமையாக இருக்க வேண்டும்-என்றார். (அ)



## 13ஆவது திருத்தம் குறித்து அடுத்த கட்ட நகர்வு என்ன?

### விசேட அறிவிப்பை வெளியிட தயாராகிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு ஒக. 03

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க இந்த தகவலை நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் வலியுறுத்திவருகின்றன. இந்தியாவும் இதற்கான அழுத்தத்தை பிரயோகித்து வருகின்றது.

இந்நிலையில் பொலிஸ் அதிகாரம் தவிர 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள அதிகாரங்களை பகிர்வது சம்பந்தமாகவும், அதற்கு தேவையான சட்ட திருத்தங்கள் பற்றியும் அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் கட்சிகளிடமும் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் அடுத்த கட்ட நகர்வுகள் சம்பந்தமான அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவுள்ளார். (அ)

## தனிமையில் சென்ற கோட்டாபய இறுதியில் படுகுழியில் வீழ்ந்தார்!

### மொட்டு கட்சி செயலர்

கொழும்பு, ஒக. 03

"கோட்டாபய ராஜபக்ஷவை நாங்கள் தனிமைப்படுத்தவில்லை. ராஜபக்ஷக்களிடமிருந்து விலகி தனித்து செயல்படுவதாகக் காண்பிப்பதற்காக அவர் தன்னைச் சுய



தனிமைப்படுத்திக் கொண்டு

14

## இந்திய ரூபாய் இலங்கையில் செல்லுபடியாகும் நாணயமல்ல

### மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஒக. 03

இந்திய ரூபாய் இலங்கையில் செல்லுபடியாகும் நாணயம் அல்ல என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டிற்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் இலங்கை ரூபாவை மாத்திரமே பயன்படுத்த முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்திய ரூபாய் குறித்து

14

## ஹரின், மனுஷவுக்கு ஐ.தே.க. அடைக்கலம்!

### செயற்குழுவிலும் இடம்

கொழும்பு, ஒக. 03

அமைச்சர்களான ஹரின் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக விதித்திருந்த தடையை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நீக்கியுள்ளது.

அத்துடன், இருவரும் கட்சி செயற்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில்

14

## மருத்துவ பொருட்களுக்கு ரூ. 3,000 கோடி மேலதிக ஒதுக்கீட்டுக்கு அரசு அங்கீகாரம்

கொழும்பு, ஒக. 03

மக்களின் நல்வாழ்வை பாதுகாக்கும் வகையில் புதிய மருத்துவ சட்டமூலத்தை ஆறு மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். அதன்படி,

தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்து, சிறந்த சுகாதார சேவையையும், பொது நலனையும் உறுதி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய காலத்திற்கேற்ற மாற்றங்களை ஆராய்ந்து புதிய மருத்துவச் சட்டமொன்றைக் கொண்டு வருவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர், சட்ட வரைஞர் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் தலைவர் ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு, செயல்படும்.

சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் சுகாதார சேவைக் கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற பின்னாய்வுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு போதுமான அவசர மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 30 பில்லியன் ரூபா மேலதிக நிதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நாடுகளின் மருந்துகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை அங்கீகரிக்கும் செயல்முறையை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு

14

## மூத்த அறிவிப்பாளர் விமல் விபத்தில் அகால மரணம்!



லண்டன், ஒக. 03

இலங்கை வானொலி அறிவிப்பாளராகவும் பி.பி.சி. தமிழோசை அறிவிப்பாளராகவும் கடமையாற்றிய விமல் சொக்கநாதன் லண்டனில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

விமல்

14

## காலாவதியான கண்ணீர் குண்டுகளை பயன்படுத்தும் இலங்கை பொலிஸார்!

கொழும்பு, ஒக. 03

இலங்கையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் காலாவதியான கண்ணீர் புகை குண்டுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் தொடர்பான தேசிய கணக்காய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்

14

## மன்னாரில் ஒதுங்கிய சடலம்!

மன்னார், ஒக. 03

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ சோதனை சாவடிக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த சடலம் நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை.

கரை ஒதுங்கிய சடலம் நீல நிற சாரம் அரை காற்சட்டை மற்றும் கறுப்பு நிற ரீசேர்ட் அணிந்த நிலையில் காணப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இப்படியும் நடக்கிறது

இலங்கையில் தமிழர்கள் ஆதிக் குடிகள் என்பதை தனது எழுத்துக்க ளாலும் ஆய்வுகளின் சான்றாதாரங் களாலும் நிறுவிய பெருமைக்குரிய வர் பேராசிரியர் பத்மநாதன்.

தமிழையும் இந்து மதத்தையும், அவற்றின் தொன்மைகளையும் நிறு வும் பணிக்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் அவர். அவர் இது வரை தமிழர்களின் அரசியல் வர லாற்றை ஆய்வு செய்திருந்தாலும் நேரடியாக அரசியல் பேசியதில்லை. ஆனால், அண்மையில் ஊடகவியலா ளர் சந்திப்பு ஒன்றை நடத்தி அவர் சொல்லியிருக்கும் கருத்துகள் கவனத் திற்குரியவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் பெரும்பாலான பீடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் கைகளுக்கு சென்றுவிட்டன என்று அந்த ஊடகர் மாநாட்டில் ஆதங்கப் பட்ட அவர், ஐந்து வருடங்கள் சென் றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணம் இல்லை எனக் கூறும் நிலை மாறிவிடும் என்றும் எச்சரிக்கை விடுத் திருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங் களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்களே பெரும்பான் மையானவர்களாக இருக்கின்றனர்.

அவ்வாறு மாறியதற்கு காரணம் என்ன? அது நடந்தது எதனால் என் பதை ஒரு கல்வியாளராக- பல்கலைக் கழகத்தின் வேந்தராக சொல்லவேண் டிய அவர், அதனை சர்வசாதாரண மாக கடந்துசென்று வடக்கு மாகா ணமும் தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தில் இருந்து மாறக்கூ டிய வகையில் ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன என்றும் அது வும் ஐந்து வருடங்களில் நடந்துவி டும் எனவும் எச்சரித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் மொழி, கலாசா ரம், பண்பாடு ஆகியவை பாதுகாக் கப்பட வேண்டுமானால், வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அதனைப் பாது காப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் உள்ள பறிக்கப்பட்ட பல அதிகாரங் களை மீளப்பெற்று நடைமுறைப்ப டுத்துவதன் மூலம் எமது இருப்பை ஓரளவு நிலை நாட்ட முடியும் என் றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிவிப்பை அவர் செய்த போது அவருக்கு அருகே அந்த ஊட கர் மாநாட்டில், தமிழர் மகா சபை ஸ்தாபகரும் தற்போது பதின்மூன்றை அமுல்படுத்தவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருப்பவருமான எந் திரி விக்னேஸ்வரன் அமர்ந்திருந்ததை யும் காணமுடிந்தது.

வடக்கு மாகாணத்தின் குடிப்பரம் பலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண் டும் என்பதில் தெற்கின் ஆளும் வர்க் கம் திட்டமிட்டு பணியற்றி வருவது இரகசியமானதல்ல.

கல்லோயாவில் டி. எஸ். சேனநா யக்காவால் தொடக்கி வைக்கப்பட்ட சிங்கள குடியேற்றத்திட்டம் இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் தனித்து ஆட்சியமைக்கமுடியாத அளவுக்கு குடிசனப்பரம்பலை மாற்றி யமைத்திருக்கின்றது.

இதேநிலைமையை வடக்கிலும் ஏற்படுத்த, தொடர்ச்சியாக பல முயற் சிகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதி லும், அது எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. ஆனால், அதற்கு மாறாக தமிழர்களின் புலம்பெயர்வு தொடர்ந் துகொண்டே இருப்பதால், வடக்கு மாகாணமும் கிழக்கை ஒத்தநிலைக்கு மாறும் அபாயம் இருப்பதை பலரும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்திருக் கின்றனர்.

அதனால்தான், இருக்கின்ற அதிகா ரத்தை வைத்துக்கொண்டு முடிந்தள வுக்கு மண்ணையும் மக்களையும் காப் பாற்றவேண்டும் என்ற கோஷம் பல் வேறு தரப்பிலிருந்தும் வந்துகொண் டிருக்கின்றது.

சமஷ்டி தீர்வுக்காக போராடிக் கொண்டிருப்பதா? அல்லது புலம்பெ யர் குழுக்கள் சில சொல்வதுபோல, நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை நிரூபித்து, அதனையடுத்து பொதுவாக்கெடுப்பு ஒன்றின் மூலம் நமக்கென தனிஅரசு ஒன்றை உருவாக் குவதாக இருக்கட்டும் - எதுவும் நாளையோ, நாளை மறுதினமோ கிடைத்துவிடப் போவதில்லை.

அதற்காகப் பல வருடங்கள் போராட வேண்டிவரலாம். அவ்வாறு பல வருட போராட்டங்களின் பின் னர், அது கிடைக்கின்றபோது, வடக் கும் கிழக்கைப்போல மாறியிருக்கும் என்ற அச்சம் பலருக்கும் உண்டு.

ஆனால், அதற்காக ஐந்து வருடங் களில் அத்தகைய மாற்றம் ஒன்று வந்த விடும் என்று பேராசிரியர் எச்சரிப் பது, சரியானதா என்பது தெரிய வில்லை.

அதுவல்ல, இன்று நாம் சொல்ல வருவது, இந்தக் கருத்தை சொல்லியி ருப்பவர் ஓர் அரசியல்வாதி என்றால் அதனைக் கடந்து சென்றிருக்கலாம். ஆனால், சொல்லியிருப்பவர் யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தின் வாழ் நாள் பேராசிரியர், வேந்தர்.

அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தில் கலைப்பீடத்தை தவிர மற் றைய பீடங்களில் பெரும்பான்மை இன மாணவர்களே பெரும்பான்மை யாகக் கல்வி கற்கின்றனர் என்று ஒரு தகவலை சர்வ சாதாரணமாக கடந்து சென்றது பலருக்கும் ஆச்சரியத்தை தந்திருக்கலாம்.

அவரைப் போன்ற கல்வியாளர் கள் முதலில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தனித்துவத்தை பாதுகாப் பது குறித்து கவனம் செலுத்தவேண் டும்.

ஒரு காலத்தில் கணித பாடம் என் பது யாழ்ப்பாணத்தவர்களின் அடை யாளமாக இருந்தது. இன்று?

பேராசிரியர் பத்மநாதன் போன்ற வர்கள் முதலில் கவனம் செலுத்த வேண்டியது, நமது கல்வித்துறை பற் றியே என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

- ஊர்க்குருவி.

# மலையக எழுச்சி பயணத்துக்கு ஆதரவாக உடையார்கட்டில் நடை பயணம் ஆரம்பம்




முல்லைத்தீவு, ஒக 03

மன்னாரிலிருந்து மாத்தளை வரையிலான மலையக எழுச்சிப் பயணத்துக்கு ஆதரவு தெரிவித்து, புதுக்குடியிருப்பு உடையார் கட்டில் நடைபயணம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு - புதுகுடியி ருப்பு சந்தியிலிருந்து கைவேலி வரையில் நடைப் பயணமாக வந்து அங்கிருந்து வாகனப் பேரணியாக கிளிநொச்சிக்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

மலையக எழுச்சி பயண வட மாகாண ஏற்பாட்டு குழு இந்த நடைப்பயணத்தை ஏற்பாடு செய்துள்ளது.

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' எனும் தொனிப்பொ ருளில் 'மலையகம் 200'ஐ முன் னிட்டு தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையான நடைப வனி கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு தலைமன் னாரில் உள்ள புனித லோரன்ஸ் தேவாலயத்தில் ஆரம்பமானது.

தலைமன்னாரில் ஆரம்பமா கியுள்ள இந்த பாத யாத்திரை ஓகஸ்ட் 12ஆம் திகதி மாத்த ளையை வந்தடையவுள்ளது. இந்த பாத யாத்திரையின் மொத்த தூரம் 252 கிலோமீற் றர்களாகும்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம், சிவில் அமைப்புகள் மற்றும் மலையக சமூகம்சார் செயற்பாட்டாளர்களை உள்ள டக்கிய "மாண்புமிகு மலையக மக்கள்" கூட்டிணைவினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாலிக்கொடி அறுத்த 4 பெண்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக. 03

தாலிக்கொடி அறுத்த குற்றச்சாட்டில் கைதான ஓர் இந்திய பெண் உட்பட நான்கு பெண்களை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்வேலி பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா கடந்த திங்கட்கிழமை நடைபெற் றது. இதன்போது பெண்ணொருவரின் தாலிக் கொடி ஒன்று அறுக்கப்பட்டது.

இதையடுத்து ஆலயத்தில் சந்தேகத் திற்கு இடமான முறையில் நடமாடிய 4 பெண்களை ஆலய இளைஞர்கள் மடக்கி பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்ப டைத்தனர்.

பொலிஸ் விசாரணையில் ஒருவர் இந் திய பிரஜை எனவும் மற்றைய மூவர் சிலா பம், மாத்தளை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்தது.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ ார் , மூவரையும் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, அவர் களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

(ஐ)

# மாண்புமிகு மலையகம் நடைபவனி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 03

மலையக எழுச்சிப் பயணத்துக்கு ஆத ரவு வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்திலி ருந்து நடைபவனி இன்று வியாழக்கிழமை காலை 8.30 ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமாகும் இந்த நடைபவ னியை மாண்புமிகு மலையக மக்கள், யாழ். சிவில் சமூகம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' எனும் தொனிப்பொருளில் தலைமன்னா ரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபவனி ஆரம்பமானது. இதற்கு ஆதரவாகவே யாழ்ப்பாணத்திலிருந்து நடைபவனி இன்று ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
03.08.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் கொள்கையற்ற அணுகுமுறை

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடையை நீக்கியிருந்தார். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை தொடர்ந்து, கோட்டாபய ராஜபக்ஷவால் தடை விதிக்கப்பட்ட அமைப்புகளுக்கே, ரணில் வெள்ளையடித் திருக்கின்றார். இதேபோன்றே கோட்டாபயவால் தடை விதிக்கப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையையும் நீக்கியிருந்தார். 2015இல், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டது. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம், பயங்கரவாதிகளென்று கூறி, சில தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீது தடை விதித்தது. கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பெயரிலேயே அனைத்தும் நடைபெற்றன.

அவ்வாறான அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகள் பின்னர், மைத்திரிபால சிறிசேன – ரணில் ஆட்சியில் நீக்கப்பட்டன. முன்னர் பயங்கரவாதிகளாக நோக்கப்பட்டவர்கள் எவ்வாறு திடீரென்று நல்லவர்களானார்கள் என்பதற்கு அரசாங்கம் எந்தவொரு விளக்கத்தையும் அளிக்கவில்லை. அவர்களை பயங்கரவாதிகளென்று கூறியதற்கு எவ்வாறு எந்தவோர் ஆதாரபூர்வமான விளக்கங்களையும் அரசாங்கம் வழங்கவில்லையோ அதே போன்றுதான், அவர்கள் மீதான தடை நீக்கப்பட்டமை தொடர்பிலும் அரசாங்கம் எந்தவொரு பதிலையும் தெரிவிக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தால் தடை நீக்கப்பட்ட அனைவரும், 2019இல், கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றியதை தொடர்ந்து மீண்டும் பயங்கரவாதிகளானார்கள். ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை தொடர்ந்து அதுவரையில் தமிழர்கள் மீது மட்டுமே பயங்கரவாத முத்திரை குத்திக் கொண்டிருந்தவர்கள், இஸ்லாமிய அமைப்புகள் மீது திரும்பின. தெரிவு செய்யப்பட்ட அமைப்புகள் சிலவற்றின்மீது தடை விதிக்கப்பட்டது. இப்போது அந்தத் தடையையே ரணில் நீக்கியிருக்கின்றார்.

முன்னர் இஸ்லாமிய பயங்கரவாதிகளாக தெரிந்தவர்கள், இப்போது எவ்வாறு நல்லவர்களானார்கள் என்பதற்கு விளக்கமில்லை. தனது தேர்தல் நலனை இலக்காகக் கொண்டுதான் ரணில் இந்த நகர்வை மேற்கொள்கின்றாரா? அது உண்மையாயின், இதனை முஸ்லிம் மக்களால் புரிந்துகொள்ள முடியாதா?

உண்மையில், பயங்கரவாதம் தொடர்பான சிங்கள ஆட்சியாளர்களின் புரிதல் கொள்கைவழியாக நோக்கப்படுவதில்லை. வெறுமனே தங்களின் சுயநல அரசியல் காரணங்களிலிருந்தே தீர்மானிக்கப்படுகின்றது. ஒருவரை அல்லது ஓர் அமைப்பை பயங்கரவாதியென்று பட்டியலிடும்போது, அவர்களது செயல்பாடுகள் தொடர்பாக ஆதாரபூர்வமான தகவல்களை அரசாங்கம் வெளியிட வேண்டும். ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ, காலத்திற்கு காலம் தங்களின் தேவைகளிலிருந்து தடைகளை போடுகின்றனர் பின்னர், அதே தடைகளை மற்றைய ஆட்சியாளர் நீக்குகின்றார்.

ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் அவர்களது நலன்களுக்கு இவ்வாறான தடைகள் தேவைப்பட்டன. முக்கியமாக, புலிகள் மீதான யுத்த வெற்றிவாதம் அவர்களது குடும்ப அரசியல் அதிகாரத்தை பாதுகாப்பதற்கு தேவைப் பட்டது. தங்களது மோசமான குடும்ப அதிகார துஸ்பிரயோகங்களையும், நாட்டை சீரழிக்கும் அணுகுமுறைகளையும் மறைப்பதற்கு, புலிகள் மீதான வெற்றிவாதம் அவர்களுக்கு தேவைப்பட்டது.

இந்த பின்புலத்தில்தான், தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை அவர்களுக்கு தேவைப்பட்டது. ஆனால் ராஜபக்ஷ அரசாங்கத்தால் தடைசெய்யப் பட்ட அனைத்து அமைப்புகளுமே, தாராளவாத மேற்குலக நாடுகளில் இயங்கி வரும் அமைப்புகளாகும். இப்போதும் ரணில் அரசாங்கம் – நாடு கடந்த அரசாங்கம் எனப்படும், தமிழ் புலம்பெயர் அமைப்பின்மீதான தடையை நீடித்து வருகின்றது. ஆனால், இந்த அமைப்பின் பிரதமராக அடையாளப்படுத்தப் படுபவரோ, அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கிவருகின்றார். அவ்வாறாயின் மேற்குலக நாடுகள் பயங்ரவாதத்துக்கு உறுதுணையாகவா செயல்படுகின்றன? அமைப்புகள் மீதான தடையை நீக்குவதுதான் ரணிலின் கொள்கை நிலைப்பாடென்றால், அனைவரின்மீதான தடையையையும் நீக்க வேண்டும். தமிழீழம் என்பது ஒரு ஜனநாயக நிலைப்பாடு என்றால், அதனை முன்வைத்து, சுதந்திரமாக செயல்படுவதற்கான சூழலையும் ஏற்றுக்கொள்ளத் தான்வேண்டும். வன்முறை அரசியலை மட்டுமே ஓர் அரசாங்கம் தடைசெய்ய வேண்டும்.

# அனைத்துப் பாட மாணவர்களும் தாதியர் பணியில் நுழைய வாய்ப்பு!

## சுகாதார அமைச்சர் கெஹலிய உறுதி

*கொழும்பு, ஓக. 03*

விஞ்ஞான பாட மாணவர்கள் மட்டுமின்றி அனைத்து பாடங்களையும் கற்ற மாணவர்களுக்கும் தாதியர் பணியில் நுழைவதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், நியாயமான மற்றும் திறந்த சந்தைக்கு இடமளிக்கும் வகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டம் நீக்கப்படும் என்றும் இலங்கை மருத்துவ சபை சட்டமும் முற்றாக இல்லாதொழிக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போதைப் பொருள் பரிசோதனைக்கான அங்கீகாரம் பெற்ற ஆய்வகத்தை அமைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவையும்



வழிகாட்டலையும் எதிர்பார்ப்பதாகவும் சுகாதார அமைச்சர் ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். (ஐ)

# தேசிய கல்வி நிறுவனத்தின் புத்தக விற்பனை நாளை முதல்!

*யாழ்ப்பாணம், ஓக. 03*

இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் வடக்கு மாகாணத்துக்கான புத்தக விற்பனை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலை பாடத்திட்டத்துக்கு அமைவான தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளிலான வள நூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், இறுவட்டுக்கள், செயல்பாட்டு நூல்கள், பயிற்சி நூல்கள், வினா - விடை நூல்கள் என்பன 20வீத விசேட கழிவுடன் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை தேசிய கல்வி நிறுவன அச்சிடல் வெளியீடுகள் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ - 02)

# சிறப்பு சொற்பொழிவு

*வடமராட்சி, ஓக. 03*

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முருகன் அற்புதம் என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இந்த சொற்பொழிவை ஆசிரியர் சி. பாலமுரளி நிகழ்த்துவார். (ஐ-02)

# சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 200 வீதத்தால் அதிகரித்துள்ளது!

*கொழும்பு, ஓக. 03*


இந்த ஆண்டின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் நாட்டின் சகல சிறைச்சாலைகளிலும் பல்வேறு வகையான குற்றச் செயல்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 200 வீதமாக அதிகரித்துள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் தற்போது 29 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரென சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற சிறைச்சாலைகளில், 13 ஆயிரத்து 241 கைதிகளை அடைத்து வைப்பதற்கு போதுமான இடமே காணப்படுகின்ற போதிலும் 10 ஆயிரம் கைதிகள் சிறைக் கைதிகளாகவும், 19 ஆயிரம் கைதிகள் சந்தேக நபர்களாகவும் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதன்படி, சிறைச்சாலை புள்ளி விபரங்களின்படி, நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளிலும் சிறைக்கைதிகளின் கூட்ட நெரிசல் சடுதியாக அதிகரித்து வருகின்ற போக்கு காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஆகஸ்ட் - 03 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 18
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவிதியை




**மேடம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாக பேசுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இதுவரை இருந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை ஒருவர் மாற்றிக் குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக ஆழமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**
உற்சாகமாக இருப்பீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்குப் பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் உண்டாகும். எதிர்ப்பார்ப்பு பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்களின் ஆலோசனையை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அசதி களைப்பு சோர்வு யாவும் நீங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரம் சூடு பிடிக்கும். புது வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்து செல்லுங்கள். சக ஊழியர்களால் பிரச்சினை வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரிக்கும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்புக் கூடும்.

ஈழத் தமிழர் பிரச்னை:

# தங்களின் சுயலாபத்துக்காக தமிழ்நாடு அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றனரா?

## தினமலர் நாளிதழ் கருத்துக்கணிப்பு

சென்னை, ஓக. 03


'இலங்கை தமிழர் பிரச்னையை தங்கள் சுயலாபத்துக்கு பயன்படுத்துகிறார்களா தமிழக அரசியல்வாதிகள்?' என தமிழ்நாட்டின் பிரபல நாளிதழான தினமலர் தனது ருவிற்றர் பக்கத்தில் நடத்திய கருத்துக்கணிப்பில் 92.8 சதவீதம் பேர் 'ஆம்' என பதிலளித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த நாளிதழ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இலங்கையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிங்களர்களுக்கும், இலங்கை தமிழர்களுக்கும் இடையே உள்நாட்டு பிரச்னை தொடர்ந்தது. 2009இல் இந்த போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அறிவித்தது. இதில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்தனர்.

இலங்கை தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என அங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகள் குரல் கொடுத்தாலும் பரவாயில்லை, இந்தியாவில் அதிலும் தமிழகத்தில் உள்ள கட்சிகள் குரல் கொடுத்து வந்தன. நாளடைவில் இலங்கை தமிழர் பிரச்னையை அரசியலாக்கவும் செய்தனர்.

நாம் தமிழர் கட்சியின் சீமான், ம. தி. மு. கவின் வைகோ ஆகியோர் இன்றளவும் இலங்கை தமிழர்கள் பிரச்னையை கையில் எடுத்து அவ்வபோது பேசிவருகின்றனர். தி. மு. க., அ. தி. மு. க. போன்ற பெரிய கட்சிகளும் அரசியலபக்கி ஆதாயம் தேடி வந்துள்ளன.




இந்த நிலையில், 'இலங்கை தமிழர் பிரச்னையை தமிழக அரசியல்வாதிகள் தங்கள் சுயலாபத்துக்கு பயன்படுத்துகிறார்களா?' என தினமலர் ருவிற்றர் பக்கத்தில் கடந்த ஜூலை 31ஆம் தேதி கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. 24 மணி நேரத்தில் 293 பேர் தங்களது முடிவுகளை அளித்தனர்.

கருத்துக்கணிப்பு முடிவில், 92.8 சதவீதம் பேர் தமிழக அரசியல்வாதிகள் சுயலாபத்துக்காக இலங்கை தமிழர் பிரச்னையை பயன்படுத்துவதாகவும், வெறும் 7.2 சதவீதம் பேர் மட்டும் 'இல்லை' எனவும் பதிலளித்தனர். இதன்மூலம், பெரும்பான்மையானவர்களின் கருத்து, 'இலங்கை தமிழர் பிரச்னையை தமிழக அரசியல்வாதிகள் தங்கள் சுயலாபத்துக்கு பயன்படுத்துகிறார்கள்' என்பதே எனத் தெரியவந்துள்ளது. (ஐ)

# மன்னிப்பு கேட்டால் எனக்கு வாக்களித்து விடுவார்களா?

## நாம் தமிழர் சீமான் கேள்வி

சென்னை, ஓக. 03

மன்னிப்பு கேட்டால் எனக்கு வாக்களித்து விடுவார்களா? என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் குறித்து நாம் தமிழர் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்த கருத்து கடுமையான விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூர் மக்களும் நமக்கு வாக்களிக்க மாட்டார்கள், அதே போல் இங்குள்ள கிறிஸ்தவ மக்களும் வாக்களிக்க மாட்டார்கள், தேவனின் பிள்ளைகளாக இருந்த கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சாத்தானின் பிள்ளைகளாக மாறி பல ஆண்டுகள் ஆகிவிட்டன என சீமான் பேசினார்.

அவரின் இந்த பேச்சு பெரிய சர்ச்சையான நிலையில் சீமானின் பேச்சுக்கு எதிராக இஸ்லாமிய அமைப்புகள் விமர்சனங்களை வைத்தன. அதேபோல் சில இஸ்லாமிய அமைப்புகள் சீமானுக்கு எதிராக பொலிஸிலும் முறைப்பாடு செய்தன.

இந்நிலையில் நேற்று சென்னை வேளச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய சீமான்,

"மன்னிப்பு கேட்டால் வாக்கு போடுவார்களா? அநீதிக்கு எதிராக உருவாக்கப்பட்ட மதங்கள் இஸ்லாமும் கிறிஸ்தவமும். ஆனால், இவர்கள் என்றாவது அநீதிக்கு எதிராக போராடியது உண்டா? என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

# என். எல். சி. அழித்த பயிர்களுக்கு ரூ. 40,000 இழப்பீடு வழங்க உத்தரவு

சென்னை, ஓக. 03

என். எல். சி. நிர்வாகத்தால், விளைநிலங்களில் சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்காக, ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக நிர்ணயித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், இந்தத் தொகையை வரும் எதிர்வரும் 6ஆம் திகதிக்குள் வழங்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், நெய்வேலி என். எல். சி. நிர்வாகம் இரண்டு சுரங்க விரிவாக்க பணிக்காக கரிவெட்டி, மேல்வளையமாதேவி, கீழ் வளையமாதேவி, ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களில் நிலங்களை 2007ஆம் ஆண்டு கையகப்படுத்தியது.

சம்பந்தப்பட்ட இடங்களில் வாய்க்கால் வெட்டும் பணியின் போது பயிர்கள் சேதப்படுத்தப்பட்டதற்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் அறுவடை செய்யப்படும் வரை விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என உத்தரவிடக் கோரி பாதிக்கப்பட்ட விவசாயி முருகன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அறுவடைக்கு பின் நிலத்தை ஒப்படைத்து விடுவீர்களா?" என மனுதாரர் தரப்புக்கும், "கையகப்படுத்திய பின் நிலத்தில் சாகுபடி செய்ய ஏன் அனுமதித்தீர்கள்?" என என். எல். சி. தரப்புக்கும் கேள்வி எழுப்பியது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிர்வரும் செப். 15ஆம் திகதிக்குள் நிலத்தை ஒப்படைக்க விவசாயிகளுக்கு உத்தரவிட்டது. அத்துடன், மீதமுள்ள நிலங்களில் பயிர் அறுவடை நடைபெறும் வரை நிலத்தை கையகப்படுத்தக்கூடாது என்றும் அத்துடன், அழிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடாக பாதிக்கப்பட்ட 88 விவசாயிகளுக்கு 40 ஆயிரம் ரூபாய் செலுத்தும்படியும் தீர்ப்பளித்தது. (ஐ)

# கெஹலியவை பாதுகாப்போம்

## மொட்டு கட்சி உறுதி

கொழும்பு, ஓக. 03

**சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி பாதுகாக்கும் என அந்தக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கடந்த வாரம் கையளித்துள்ளது. (அ)



# அஸ்வெசும கொடுப்பனவு இந்த வாரத்தில் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 03

அஸ்வெசும பயனாளர்களுக்கான முதலாவது தவணை கொடுப்பனவு இவ்வாரத்தில் வழங்கப்படவுள்ளதாக சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கான வங்கி கணக்குகளைத் திறக்கும் செயற்பாடு 95 வீதம் நிறைவடைந்துள்ளதாக சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் அஸ்வெசும பயனாளர்களுக்கு அவர்களின் பிரிவிற்கேற்ப மாதாந்தம் 15000, 8,500, 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதனிடையே, அஸ்வெசும திட்டம் தொடர்பாக கிடைத்துள்ள மேன்முறையீடுகள், ஆட்சேபனைகளை பரிசீலித்ததன் பின்னர், மற்றுமொரு பயனாளர்கள் குழு இந்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவரென சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பயனாளர்களின் வங்கி கணக்குகளில் கொடுப்பனவுகள் வைப்பிடலிடப்படவுள்ளன. (அ)

# சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, ஓக. 03

சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தினரால் இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்துரைப்பதற்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கோரியே சுகாதார தொழிற்சங்க சம்மேளனம் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள தீர்மானித்திருந்தது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுடன், நேற்று காலை அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றதை அடுத்து, தமது தொழிற்சங்கப் போராட்டத்தை கைவிடத் தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது. (அ)

# அரிய வகை கடலாமை மீட்பு

மன்னார், ஓக. 03

மன்னாரில் இருந்து வாகனம் ஒன்றில் உயிருடன் மறைத்து கொண்டு செல்லப்பட்ட அரிய வகை கடலாமை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, நேற்று முன்தினம் மன்னார் - சௌத்பார் பிரதான வீதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, குறித்த கடல் ஆமை மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அது, சுமார் 150 கிலோகிராம் எடை கொண்ட, அரிய வகை கடலாமை வகையைச் சேர்ந்தது என குறிப்பிடப்படுகின்றது. சம்பவம் தொடர்பில், வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீட்கப்பட்ட கடலாமை பாதுகாக்கப்பட்டு வருவதுடன், நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது. (அ)

# பொலிஸ் அதிகாரியை மிரட்டிய பேருந்து உரிமையாளர் கைது!

கொழும்பு, ஓக. 03

வெலிக்கடை பொலிஸ் பிரிவின் போக்குவரத்து பிரிவில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில், தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடைக்கும், ஹெட்டியாவத்தைக்கும் சேவையில் ஈடுபடும் 176ஆம் இலக்க தனியார் பேருந்து ஒன்றின் உரிமையாளரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் சாரதிக்கு எதிராக அபராதம் விதிப்பதற்கு குறித்த பொலிஸ் அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கு, எதிர்ப்பு தெரிவித்து, பொலிஸ் அதிகாரிக்கு பேருந்து நடத்துனராக கடமையாற்றிய அதன் உரிமையாளரினால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில், அது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன.

காணொளியின் அடிப்படையில், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பளையில் தீயில் கருகிய 2 ஆயிரம் பனை மரங்கள்

கிளிநொச்சி, ஓக. 03

கிளிநொச்சி பளை பிரதேசத்தில் உள்ள பனைக்காட்டில் நேற்று முன் தினம் ஏற்பட்ட தீயினால் சுமார் 2000 பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த பனங்காட்டை அண்டிய தனியார் பண்ணை ஒன்றின் தொழிலாளர்கள் குழுவொன்று தோட்டத்தின் குப்பைகளுக்கு தீ வைத்துள்ளது. பனங்காடு நோக்கி தீ பரவியதால் அது தீக்கிரையாகியுள்ளது.

தீயினால் சேதமடைந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பனை மரங்கள் மட்டுமன்றி பெருமளவிலான பனை விதைகள் மற்றும் சிறு செடிகளும் நாசமாகியுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இந்த தீயினால் ஏற்பட்ட சேதம் சுமார் மூன்று கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பொறுப்பற்ற முறையில் குப்பைகளை மக்கள் கொட்டி தீ வைப்பதால் ஆண்டுக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் பனந்தோட்டங்களுக்கு சேதம் ஏற்படுவதாக கூறப்படுகிறது. (அ)

# கலா ஓயாவில் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் மரணம்!

கொழும்பு, ஓக. 03

நொச்சியாகம, கலா ஓயாவில் நீராடச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை குறித்த மாணவன் நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாலியவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் சில நண்பர்களுடன் கலா ஓயாவுக்கு அருகில் உள்ள தேவாலயத்துக்கு செல்வதாக பெற்றோருக்கு தெரிவித்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

கலாஓயில் நீராடச் சென்ற வேளையில் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# விஜயகுமாரதுங்க சிலை மீது கற்களை வீசித் தாக்குதல்!



கொழும்பு, ஓக. 03

தெஹிவளை, பொதுச்சந்தை வளாகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள விஜய குமாரதுங்கவின் உருவச்சிலைமீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் விஜய குமாரதுங்கவின் உருவச்சிலையில் முகப்பகுதி ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இந்த சேதத்தை ஏற்படுத்தியவர் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வவுனியா சிறைச்சாலையில் இருக்கும் சகல கைதிகளுக்கும் விசேட தடுப்பூசி!

வவுனியா, ஓக. 03

வவுனியா சிறைச்சாலையில் தட்டம்மை தடுப்பூசி பெறாத அனைத்து கைதிகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைக்குள் அம்மை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா சிறைச்சாலையில் நான்கு கைதிகளுக்கு அம்மை நோய் இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து ஜூலை 25 ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டது.

கைதிகள் உறவினர்களை சந்திப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை சந்திக்கும் வாய்ப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

இதேநேரம் கைதிகளை சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. (அ)

# தேசிய கீதத்தை தமிழில் இசைப்பதும் தவறாகும்!

## கூறுகிறார் காமினி லொக்குகே

கொழும்பு, ஓக. 03

**தேசிய கீதத்தை திரிபுபடுத்தி பாடுவது தண்டனைக்குரிய தவறாகும் என்பதோடு தேசிய கீதத்தை தமிழ்மொழியில் இசைப்பதும் தவறு என்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் 13 ஆவது அரசியலமைப்பு தேவையற்றதாகும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தமிழர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களுக்கும் பிரச்னை உள்ளது. ஒரு தரப்பினரது பிரச்னைக்கு அரசியலமைப்பு ஊடாக மாத்திரம் எவ்வாறு தீர்வு காண்பது? அரசியலமைப்பின் 13 ஆவது



திருத்தத்துக்கு இலங்கையின் தென் மாகாணத்தில் கடும் எதிர்ப்பு காணப்படும் பின்னணியில் அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை துரிதமாக அபிவிருத்தி செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி அப்பிரதேச மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தியிருந்தார். அந்த உரிமையை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பாதுகாத்துக் கொள்ளவில்லை-என்றார். (அ)

# பாதாள உலகக்குழு செயற்பாட்டை கட்டுப்படுத்த புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக. 03

பாதாள உலகக்குழு செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகம் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து வினவப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் தென் மாகாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் நாளாந்தம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

எனினும் இதற்கான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை அடுத்து குறித்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

அத்துடன் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை ஊடகங்களின் ஊடாக வெளிப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது-என்றார். (அ)

# அரச நில அளவை அதிகாரிகள் சுகயீன விடுமுறை போராட்டம்

கொழும்பு, ஓக. 02

அரச நில அளவை அதிகாரிகள் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சேவையில் நிலவும் பிரச்னைகளுக்கான தீர்வை வழங்குவதற்கு ஏற்பட்டுள்ள தாமதத்தைக் கண்டித்து அவர்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

பதவி உயர்வு, வளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி, இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக நில அளவை சங்கத்தின் தலைவர் தமிந்த உதுகொட தெரிவித்தார். (அ)

# உழவு இயந்திரம்-மோ.சைக்கிளில் மோதியதில் இளைஞர் உயிரிழப்பு

## கொக்குதொடுவாயில் சம்பவம்

முல்லைத்தீவு, ஓக. 03

உழவு இயந்திரம் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதி தடம் புரண்டதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்து மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்தை திருத்தப் பணிக்காக கொக்கிளாயிலிருந்து கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள திருத்தகத்திற்கு கொண்டு சென்று மீண்டும் கொக்கிளாய் பகுதி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கொக்குத்தொடுவாய் பாடசாலைக்கு முன்பாக வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதி உழவு இயந்திரம் தடம்புரண்டது.

இதன்போது இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் கொழும்பை சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

42 மற்றும் 27 வயதுடைய இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மூவரும் உழவு இயந்திரத்தில் பயணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இரகசியமாக வளர்க்கப்பட்ட 9,000 கஞ்சா செடிகள் தீ வைப்பு

## இருவர் பொலிஸாரால் கைது





கொழும்பு, ஓக. 03

தனமல்வில - சூரியார பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் இரகசியமாக கஞ்சா பயிரிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சூரியவெவ முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் சுமார் 60 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் 9,000 கஞ்சா மரங்களையும் 750 கஞ்சா நாற்றுகளையும் வளர்த்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

அந்த கஞ்சா மரங்கள் மற்றும் செடிகள் அனைத்தையும் எரித்து அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தனமல்வில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# 5, 450 பட்டதாரிகள் விரைவில் ஆசிரிய சேவையில் இணைப்பு

கொழும்பு, ஓக. 03

5 ஆயிரத்து 450 பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி தர மேம்பாடு தொடர்பில், பதுளையில் இடம்பெற்ற அதிபர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதன்படி, தொழிநுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகியனவற்றை கற்பிப்பதற்காக குறித்த பட்டதாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என அவர் கூறினார்.

அவர்கள், நாடளாவிய ரீதியில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்காக உள்வாங்கப்படவுள்ளனர்.


இதேவேளை, அடுத்த வருடத்திற்கான பாடசாலை சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் குறிப்பிட்ட திகதிகளில் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டவர்கள் இன்னும் ஆசிரியர் சேவைக்குள் இணைத்து கொள்ளப்படாதுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி அவர்கள், ஆசிரிய உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

அவர்கள், தமது பயிற்சியினை உரிய வகையில் பூர்த்தி செய்திருந்தும், இன்னும் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படாதுள்ளனர்.

கடந்த மாதத்திற்குள் மத்திய மாகாணத்தில், உள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கு நியமனம்



வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவித்திருப்பினும், தொடர்ந்தும் இந்த நியமனம் இழுபறி நிலையிலேயே காணப்படுகின்றது. (அ)

# சமஷ்டி கேட்டால் மீண்டும் நாட்டில் இரத்த ஆறு ஓடும்!

## கம்மன்பில எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 03

**“சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தால் இந்த நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஓடும் என்று கூறிவைக்க விரும்புகின்றோம்.”**

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

கிடைக்க மாட்டாத ஒன்றைத் திருப்பித் திருப்பிக் கேட்டால் கிடைக்கும் என்று சம்பந்தன் அணியினர் எண்ணுகின்றனர்.

கிடைக்க மாட்டாத சமஷ்டியைக் அவர்கள் கேட்பதால் - அதில் விடாப்பிடியாக இருப்பதால் இன முரண்பாடு மேலும் உச்சமடையும். மீண்டும் இரத்தக்களரிதான் ஓடும்.

நாட்டில் இன முரண்பாடு உக்கிரமடைய நாம் விரும்பவில்லை. ஆனால், அந்த மோசமான நிலைமையைத் தமிழ்த் தலைவர்கள் விரும்புகின்றனர். அதை வைத்து நீண்ட காலத்துக்கு அரசியல் பிழைப்பு நடத்தலாம் என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடுகின்றனர்-என்றார்.

(அ)

# நாட்டின் ஏற்றுமதி வருமானம் உயர்வு

கொழும்பு, ஓக. 03

மாதாந்த ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்கன் டொலரை விட அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் மொத்தமாக 5.9 பில்லியன் அமெரிக்கன் டொலராக காணப்படுவதாகவும் அந்த வகையில் கடந்த மே மாதத்தில் ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியனாக காணப்பட்டதுடன் ஜூன் மாதத்திலும் அதே போன்று ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்கன் டொலர்களை விட அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த ஜூன் மாதம் சுற்றுலாத்துறை மூலமானவருமானம் 123 மில்லியன் டொலராக இருந்துள்ளதுடன் இது கடந்த வருடத்து தொன் ஒப்பிடும்போது 173 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் 2,823 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்கள் மூலமாக நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் மத்திய வங்கியின்அறிக்கை தெரிவிக்கின்றது.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் சுயாதீன வேட்பாளராக போட்டி

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஓக. 03

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விரிவான அரசியல் கூட்டணி உருவாக்கப்படும் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு வடக்கு தொகுதியின் முகத்துவாரம் போனவிஸ்டா மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க சுயாதீன மற்றும் கட்சி சார்பற்ற வேட்பாளராக போட்டியிடுவார்.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்.

தற்போதைய காலம் நம் அனைவருக்கும் கஷ்டமான காலம் என்பதை நாம் அறிவோம். இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வர நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

சாப்பிடவும் குடிக்கவும் முடியுமா, பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை எப்படி முன்னெடுப்பது போன்ற பிரச்னைகள் உங்களது தலைக்குள் இருக்கலாம்.

அரசியல் பூச்சாண்டிகளை உருவாக்கி நாடு ஒன்றை முன்னெடுத்துச் செல்ல முடியாது. பேய்களை உருவாக்கி நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியாது.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கசப்பாக இருந்தாலும் உண்மையை கூறினால் அதன் நிஜமான பிரதிபலன் கிடைப்பதற்கு நீண்டகாலம் செல்லாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இதுதான் நடந்தது. இதனால், நாடொன்றை உருவாக்கக்கூடிய இளம் வயதினரும் பெண்களும் எமக்கு அவசியம்-என்றார்.

(அ)

# பொலிஸ் தொப்பிகளால் 12 கோடி ரூபாய் நட்டம்!

கொழும்பு, ஓக. 03

கொள்முதல் செயன்முறைக்கு அப்பால் சென்று, இலங்கை பொலிஸாருக்கு தேவையான 75 ஆயிரம் தொப்பிகளைக் கொள்வனவு செய்ததால், பொலிஸ் திணைக்களத்துக்கு 12 கோடி ரூபாய்க்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு 75 ஆயிரம் தொப்பிகளை கொள்வனவு செய்தபோதே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசியக் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு தேவையான 75 ஆயிரம் தொப்பிகளைக் கொள்வனவு செய்யும் செயன்முறை 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு 75 ஆயிரம் தொப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு 9 கோடியே 34 இலட்சம் (93,455,119) ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த தொப்பிகளைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட காலத்தாமதம் உள்ளிட்டக் காரணங்களால், 75 ஆயிரம் தொப்பிகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான கட்டணம், சட்ட ஆலோசனைக்கானக் கட்டணம், டொலருக்கான நிகரான ரூபாயின் பெறுமதி குறைந்தமைக்கான நட்டம் என்பவற்றை இலங்கைப் பொலிஸார் தமக்கு செலுத்த வேண்டுமென விநியோகஸ்தர்கள் கோரியிருக்கிறார்கள்.

எனவே, உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாதக் காரணங்களால் 2017ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி எடுக்கப்பட்டத் தீர்மானத்தின்படி, 75 ஆயிரம் தொப்பிகளுக்கான செலவுகள் மற்றும் ஏனைய செலவுகளை பொலிஸார் விநியோகஸ்தர்களுக்கு வழங்க மறுத்துள்ளனர்.

இது தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையையும் பொலிஸார் சென்றிருக்கிறார்கள்.

2011ஆம் ஆண்டு 75 ஆயிரம் தொப்பிகளைக் கொள்வனவு செய்ய 9 கோடியே 35 இலட்சத்து 55 ஆயிரத்து 119 ரூபாயே செலவாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது, 21 கோடியே 93 இலட்சத்து 57 ஆயிரத்து 715 ரூபாய் செலுத்த வேண்டிய நிலை இலங்கைப் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், 12 கோடிக்கும் அதிகமான (125,902,596 ரூபாய்) நட்டம் ஏற்பட்டுள்ளது.

கொள்வனவு செயன்முறையின்போது உரிய நடைமுறைப் பின்பற்றபடாமை, நீண்ட காலம் சென்றதற்குப் பின்னர் இணக்கப்பாட்டுக்கு வந்தமை உள்ளிட்டவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என பொலிஸார் இன்னும் கண்டறியவில்லை- என்றுள்ளது.

(அ)

# சுவாசப்பைத் தொழிற்பாடு அளவிடும் பிரிவு முதன்முதலாக மல்லாவி வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, ஓக. 03

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் நோயாளிகளுக்கான சுவாசப்பை தொழிற்பாடு அளவிடும் பரிசோதனைப் பிரிவு நேற்று முன்தினம் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் பேராசிரியர் பேரானந்தராஜா மற்றும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர், தெல்லிப்பளை பொது வைத்திய நிபுணர் நிஷாகன் மற்றும் மல்லாவி வைத்திய அத்தியட்சகர் - மைத்ரேயி, மல்லாவி பொது வைத்திய நிபுணர் ருஷாந்தினி மற்றும் மல்லாவி வைத்தியசாலை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

மல்லாவி வைத்திய சாலை வன்னி பிராந்தியத்திலேயே அதிகஸ்ட பிரதேசங்களான மல்லாவி,நட்டாங்கண்டல், ஐயங்கன்குளம், கோட்டை கட்டியகுளம் போன்ற கிராமங்கள் உள்ளடங்கலான 47ஈற்கு மேற்பட்ட கிராமங்களுக்கான ஒரேயொரு ஆதார வைத்தியசாலையாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த காலங்களில் சுவாசப்பை பிரச்னை தொடர்பிலான பரிசோதனைகளுக்காக வெளி மாவட்டங்களுக்கே சென்று பரிசோதனைகளை மேற்கோள்ளவேண்டிய ஒரு சூழ்நிலை காணப்பட்டது.

சுவாசப்பை தொழிற்பாடு அளவிடும் பரிசோதனைப் பிரிவு மாவட்டத்திலேயே முதன்முதலில் மல்லாவி ஆதார வைத்தியசாலையிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஜூலை 83 தமிழின அழிப்பு:

## 40 ஆண்டுகளின் பின்னரும் கூட அதற்கு வழிகோலிய மூல காரணங்கள் இன்னும் கவனத்தில் எடுக்கப்படவில்லை

2023 ஜூலை 23ஆம் திகதி 1983 ஜூலை இன அழிப்பின் 40ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது. இந்த இன அழிப்பு இலங்கையின் வரலாற்றில் அழியாத ஒரு கறையை விட்டுச் சென்றிருக்கிறது. இந்த இருண்ட அத்தியாயம் நமது தேசத்தின் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட யுகத்தின் பூதாகரமான ஒரு நிழலாக வியாபித்திருப்பதுடன், அதனையடுத்து இடம்பெற்ற நீண்ட உள்நாட்டுப் போரில் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்தது. இந்த வன்முறைக்கான விதைகள் நீண்ட காலத்துக்கு முன்னரேயே விதைக்கப்பட்டிருந்தன. 1956, 1958, 1961, 1964, 1974, 1977 மற்றும் 1981 ஆகிய வருடங்களையும் உள்ளடக்கிய விதத்தில் 1983 வரையில் தமிழர்களுக்கெதிரான பகைமையுணர்ச்சி பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வடக்கிலும், கிழக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியையும் ஒடுக்குவதற்கு முயற்சித்தது. இந்தக் கொடூர உத்தியின் விளைவாக சுமார் 200,000 மக்கள் (பெரும்பாலும் சிவிலியன்கள்) உயிரிழந்தார்கள். வன்முறைச் சம்பவங்களின் விளைவாக பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் இடம்பெயர்ந்ததுடன், அவர்கள் தமது சொந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாக மாறினார்கள். இந்தச் சம்பவங்களின் பின்னர் பெருந்தொகையான குடும்பத் தலைவிகள், பெற்றோரை இழந்தோர் மற்றும் உடல் ரீதியான, உள ரீதியான காயங்களைக் கொண்ட தனிநபர்கள் பெரும் எண்ணிக்கையில் எஞ்சியிருந்தார்கள். பெண்கள் மற்றும் பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் பல கிராமங்கள் முற்று முழுவதும் நிர்மூலமாக்கப்பட்டன. சிறப்புச் சலுகையுடன் கூடிய சிங்கள ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஏனைய குடிமக்கள் மீது பிரயோகிக்கும் நோக்கத்துடனேயே இவை அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன.

இப்பொழுது 40 வருடங்கள் கழிந்திருக்கும் நிலையிலும் கூட, ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த பல்வேறு அரசியல் கூட்டணிகளுடன் கூடிய அரசாங்கங்கள் இந்த வன்முறையைத் தூண்டிய தேசிய பிரச்சினையின் மூல காரணங்களை கவனத்திலெடுக்கத் தவறியுள்ளன. இந்த இன அழிப்பின் பின்னணியிலிருந்த காரணங்களைப் புரிந்துகொள்ளும் பொருட்டு பெரும்பான்மை சாராத சமூகங்களுக்கு - குறிப்பாக தமிழ் சமூகத்துக்கு - எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட பாரபட்ச இயல்பிலான கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை எடுத்து விளக்கும் சுருக்கமான ஒரு வரலாற்றுக் குறிப்பை வழங்குவது அவசியமாகும்.

பத்து இலட்சம் மலையகத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்த 1948ஆம் ஆண்டின் இலங்கை குடியுரிமை மசோதாவுடன் பாரபட்சம் காட்டும் கொள்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. குடியுரிமை வழங்குவதற்கான ஒரு வழிமுறையாக அது சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதேவேளையில், அந்த மசோதாவின் உண்மையான நோக்கம் பிரதானமாக இடதுசாரி வேட்பாளர்களுக்கு ஆதரவளித்து வந்த இந்தத் தொழிலாளர்களின் குடியுரிமையை மறுப்பதாகும். பல தலைமுறைகளைச் சேர்ந்த மலையகத் தொழிலாளர்கள் நாட்டுக்கு வழங்கிய பொருளாதார பங்களிப்புக்கள் உதாசீனப்படுத்தப்பட்டது. அவர்கள் வழங்கி வரும் பங்களிப்பு இது வரையில் உரிய விதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

அரசு வன்முறைக்கூடாக தமிழர்கள் வலுவிழக்கச் செய்யப்பட்டமை தமிழர்களின் குடித்தொகையிலும், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்திலும் ஒரு குறைவை எடுத்து வந்தது. இது சிங்கள மேட்டுக்குடியினர் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளித்ததுடன், தம்மை மிகவும் மோசமாகப் பாதித்த கொள்கைகளைத் தடுப்பதற்கு அதிகாரமற்ற ஒரு சமுதாயமாக தமிழர்கள் கைவிடப்பட்டிருந்தார்கள். தெற்கில் அரசியல் போட்டி தீவிரமடைந்து வந்த நிலையில் தமது இன, மொழி மற்றும் சமயப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டு சமூகங்களை வெவ்வேறு பிரிவுகளாக பிரிக்கும் ஒரு போக்கு தோன்றியது. இந்தப் பிரிவினை இன்று வரையில் தொடர்ந்து நிலவி வருவது கவலைக்குரியதாகும்.

எஸ்.டப்பிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவால் ஸ்தாபிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் என்பவற்றினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட 1956 இன் சிங்களம் மட்டும் கொள்கை வரலாற்று ரீதியாக ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களத்தை எடுத்து வந்ததுடன், உத்தியோகபூர்வ பாவனையிலிருந்து தமிழ் மொழியை வெளியேற்றியது. ஏற்கனவே பலர் விருப்பத்துடன் பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்றிருந்த போதிலும், இந்த நகர்வு தமிழர்கள் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முன்னேற்றம் என்பவற்றுக்கு சிங்கள மொழியைக் கற்க வேண்டிய நிர்ப்பந்தத்தை எடுத்து வந்தது. மேலும், அது சிங்கள மக்களை ஒரு மொழியை மட்டும் பயன்படுத்துபவர்களாக ஆக்கியதன் மூலம் பிரதிகூலமான ஒரு நிலைக்குள் தள்ளியது. மேட்டுக்குடியினர் அல்லாத பல தலைமுறைகளைச் சேர்ந்த சிங்களவர்கள் சமூகத்தில் மேல் நோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்களை அது வரையறை செய்தது.

பண்டாரநாயக்க - செல்வநாயகம் மற்றும் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தங்கள் போன்ற அரசாங்கத்துக்கும், தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையில் நல்லிணக்கத்தை எடுத்து வருவதற்கான முயற்சிகள் தீவிர சிங்கள பௌத்த தேசியவாத அழுத்தங்கள் காரணமாக இறுதியில் கைவிடப்பட்டன. இந்தக் கால கட்டம் நெடுகிலும் சிங்கள மக்கள் தமிழர்கள் செறிந்து வாழ்ந்து வந்த பிரதேசங்களில் மீள் குடியமர்த்தப்பட்டு வந்தனர். இது சிங்கள ஆதரவு தேர்தல் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் குடிசனவியலில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு வழிகோலியது. பண்டாரநாயக்க ஆட்சி 1950 களில் தமிழர்களின் அஹிம்சை வழியிலான எதிர்ப்புக்களை அடக்குவதற்கென கும்பல் வன்முறையைப் பயன்படுத்தியது. 1958 கும்பல் வன்முறை காரணமாக சுமார் 300 மரணங்கள் இடம்பெற்றன.

சிங்கள பௌத்தத்துக்கு சாதகமான 1972 இன் புதிய அரசியல் யாப்பு மற்றும் கல்வியை தரப்படுத்துவது தொடர்பான கொள்கையின் அறிமுகம் என்பன பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு மேலும் பாரபட்சத்தை எடுத்து வந்திருந்தன.

இந்தப் பாரபட்ச இயல்பிலான வழிமுறைகள் வன்முறையுடன் கூடியதான ஒரு சூழலில் அமுல் செய்யப்பட்டன. இதனை ஒரு சாக்காகக் கொண்டு பண்டாரநாயக்க அரசாங்கம் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியதுடன், தீவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தை சேவையில் அமர்த்தியது. தீவிரவாத கூறுகள் அகற்றப்பட வேண்டுமென்றும், அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டாவது இதனை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேர்ணல் ரிச்சர்ட் உடுகம கண்டிப்பான விதத்தில் உத்தரவுகளை பிறப்பித்திருந்தார்.

1972 இன் சிங்கள பௌத்த ஆதரவு அரசியல் யாப்பிற்கு எதிராக தமிழ் இளைஞர்கள் கறுப்புக் கொடி காட்டிய பொழுது அவசரகால சட்ட விதிகளின் கீழ் அவர்கள் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். 1977 ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆறு மாத காலத்துக்குள் பயங்கரவாதத்தை முற்றாக துடைத்தெறிய வேண்டுமென்ற கட்டளையுடன் பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது. 1980 களுக்கு முற்பட்ட காலப் பிரிவின் போது வடக்கிலும், கிழக்கிலும் நிகழ்த்தப்பட்ட பெருந்தொகையான அட்டூழியச் செயல்களுக்கு உடுகம மற்றும் வீரதுங்க ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதனைக் காட்டும் நம்பகமான சான்றுகள் கிடைத்துள்ளன.

அதன் விளைவாக, தமிழ் மக்கள் எதிர்கொண்டு வந்த பாரபட்சம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை தமிழ் அரசியல் கட்சிகளினால் தீர்த்து வைக்க முடியவில்லை. தெற்கில் 1977 இல் ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்டது. வடக்கிலும், கிழக்கிலும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி வட்டுக்கோட்டை பிரகடனத்தை வாக்காளர்கள் முன்னால் எடுத்துச் சென்று, தமிழ் ஈழம் எனப்படும் ஒரு தனிநாட்டை உருவாக்குவதற்கு மக்கள் ஆணை தமக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. அதனையடுத்து அவர்களுக்கு அமோகமான ஒரு மக்களாணை கிடைத்தது. தேர்தலுக்குப் பிற்பட்ட காலப் பிரிவின் போது தமிழ் குடிமக்களுக்கு எதிராக மிக மோசமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. அந்த வன்முறைச் சம்பவங்கள் அரச அனுசரணையுடன் நிகழ்த்தப்பட்ட காரணத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

வடக்கை ஆக்கிரமித்திருந்த இராணுவத்தின் மீதான முதலாவது தாக்குதல் 1981 அக்டோபர் மாதம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனத்துவ பயங்கரவாதம் காரணமாக பதவியுயர்வு பெற்று, புதிய இராணுவ கமாண்டராக பதிவியேற்ற திஸ்ஸ வீரதுங்கவை வரவேற்பதற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அணிவகுப்பு மரியாதையுடன் இணைந்த விதத்தில்



லயனல் போப்பகே

இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது போல் தெரிந்தது. அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் விதத்தில் இராணுவ வாகனத் தொடரணிகள் மற்றும் ரோந்துப் படையணிகள் என்பவற்றை இலக்கு வைத்து நிகழ்த்தப்படும் தாக்குதல்கள் அதிகரித்தன. பாதுகாப்புப் படையினரால் தாக்குதல் தொடுக்கும் நபர்களை தேடிப் பிடிக்க முடியாதிருந்த காரணத்தினால் அவர்கள் சிவிலியன்களை இலக்கு வைக்கத் தொடங்கினார்கள். சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் புதியவை அல்ல. உலகளாவிய ரீதியில் பல மோதல்களின் போது தாக்குதல் தொடுப்பவர் யாராக இருந்தாலும் வன்முறையின் விளைவுகளை பெருமளவுக்கு சிவிலியன்களே ஏற்க வேண்டியிருந்தது என்பதனை வரலாறு உறுதிப்படுத்துகின்றது. இலங்கையில் நிகழும் சம்பவங்களுக்குப் பதிலடியாக தமிழ் இளைஞர்கள், தமக்குத் தோல்வியை எடுத்து வந்த வாக்குச் சீட்டுக்களுக்குப் பதிலாக ஆயுதங்களை ஏந்தத் தொடங்கினார்கள். தீவிரவாத தமிழ் இளைஞர்களின் நோக்கம் தாம் உள்ளாக்கப்பட்டிருந்த பாரபட்ச நிலையிலிருந்து தமது மக்களை விடுவிப்பதாகவே இருந்து வந்தது. சமூகங்களை இன, மொழி மற்றும் சமயப் பிரிவினைகளின் அடிப்படையில் பிரித்து வைப்பதற்குப் பதிலாக, அவற்றை ஒற்றுமைப்படுத்தி, தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியை முன்னெடுப்பதில் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கை: சிறீலங்கா தோல்வியடைந்திருந்த நிலைமை காரணமாகவே தமிழ் இளைஞர்கள் அவ்விதம் ஆயுதம் ஏந்தியிருந்தார்கள்.

1981 இல் இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்துடன் இணைந்த விதத்தில் நிலைமை மேலும் மோசமடைந்தது. அது 1983 ஜூலையில் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு வழிகோலியது. இந்த வன்முறை தமிழ் சிவிலியன்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் விளைவாக ஆயிரக்கணக்கான மரணங்கள், இடப்பெயர்வுகள், காயங்கள் மற்றும் வன்புணர்வுகள் என்பன நிகழ்ந்தன. மேலும், அம்மக்களின் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. அரசாங்கம் இதற்கான பழியை வேறு தரப்புக்களிடம் போட முயற்சித்தது. ஆனால், இந்த வன்முறை சர்வதேச கவனத்தை ஈர்த்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்குள் இருந்த இனத்துவ தீவிரவாதத் தலைமைத்துவம் 1983 ஜூலை கலவரங்களைத் திட்டமிட்டு நிகழ்த்தியதன் மூலம் ஏற்கனவே கொந்தளிப்பாக இருந்து வந்த நிலைமையை மேலும் மோசமாக்கியது. அக்கலவரங்கள் சிறில் மெத்தியூ போன்ற அமைச்சர்கள், எல்லே குணவங்ச தேரர் போன்ற மதகுருக்கள் ஆகியோரினால் மிகவும் நுட்பமான விதத்தில் திட்டமிடப்பட்டிருந்தன. எல்லே குணவங்ச தேரர் ஜனாதிபதி ஜெயவர்தன மற்றும் ஏனைய சிங்கள தீவிரவாதிகள் ஆகியோரின் ஒரு நெருங்கிய கூட்டாளியாக இருந்து வந்தார். மெத்தியூ போன்ற அமைச்சர்கள் தமது சொந்த (மறுபக்கம் பார்க்க)

ஆயுதக் குழுக்களை பராமரித்து வந்தது டன், சட்டத்துக்கு அப்பால் அவர்கள் செயற்பட்டு வந்தார்கள். இன்னமும் அத்தகைய நிலைமைகள் நிலவி வருவது கவலைக்குரிய ஒரு விடயமாகும். எவ்வாறிருப்பினும், இன அழிப்பின் விளைவாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பலம் வாய்ந்த இயக்கமாக வளர்ச்சியடைந்ததுடன், இன அழிப்பு காரணமாக தென்னிலங்கையிலிருந்து தப்பிச் சென்ற பெருந்தொகையான இளைஞர்கள் அந்த இயக்கத்தில் இணைந்து கொண்டார்கள்.

சமூகங்களுக்கிடையிலான நிலவரம் அப்போது ஒரு வெடி மருந்து கிடங்கு போல் இருந்து வந்தது. ஒரு தீக்குச்சியை கொளுத்துவதே செய்ய வேண்டியிருந்த ஒரே காரியமாக இருந்து வந்தது. இதற்கான பொறி 1983 மே மாதம் கிடைத்தது. ஒரு இராணுவ வாகன அணி மீது மறைந்திருந்து நிகழ்த்தப்பட்ட ஒரு தாக்குதலை அடுத்து பாதுகாப்புப் படையினர் கடும் அட்டூழியங்களை நிகழ்த்தினார்கள். யாழ்ப்பாண தீபகற்பத்தின் பல்வேறு இடங்களில் அவர்கள் 51 அப்பாவி தமிழ் சிவிலியன்களை கொலை செய்தார்கள். ஜூன் மாதம் இடம்பெற்ற அத்தகைய ஒரு தாக்குதலின் போது வவுனியாவில் கடற்படை அதே விதத்தில் பழிவாங்கல் நடவடிக்கையை மேற்கொண்டது. தமிழ் தீவிரவாதிகளை அழித்தொழிப்பதற்கான இறுதித் தீர்வை அரசாங்கம் அமுல் செய்யப் போகின்றது என்ற விதத்திலான வதந்திகள் கொழும்பில் பரவியிருந்தன.

திருநெல்வேலியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மறைந்திருந்து நிகழ்த்திய ஒரு தாக்குதலில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட போது அந்தத் திட்டத்தைத் துவக்கி வைப்பதற்கான வாய்ப்பு அரசாங்கத்துக்குக் கிடைத்தது.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், வடக்கில் செயற்பட்டு வரும் அதனையொத்த ஏனைய இயக்கங்களையும் தடை செய்தது. தொடக்கத்தில் அவசரகால சட்டங்களின் கீழ் 1983 ஜூலை மாதத்தில் தெற்கில் ஜே.வி.பி, நவ சம சமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் தடை செய்யப்பட்டன. பின்னர் அத்தடை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. இச்சட்டம் கைது செய்யப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தது. அவ்விதம் கைதுசெய்யப்பட்டவர்களை குற்றப் பத்திரிகையோ அல்லது வழக்கு விசாரணையோ இல்லாமல் பதினெட்டு மாதங்கள் வரையில் தடுப்புக் காவலில் வைக்கக்கூடிய வாய்ப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்தது. மேலும், சித்திரவதையின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட குற்ற வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்கத்தக்கவையாகவும் ஆக்கப்பட்டது. தமிழ் மக்களை சரணடையச் செய்வதற்கு நிர்ப்பந்திப்பதற்கென அம்மக்கள் மீது தொடர்ந்தும் பயங்கரவாதம் மற்றும் வன்முறை என்பவற்றை கட்டவிழ்த்து விடுவதே அரசின் கொள்கையாக இருந்து வந்தது.

தமிழ் மக்களுக்கெதிரான 1983 இன அழிப்புக்குத் தலைமைத்துவம் வழங்கியதாக ஒரு போலிக் குற்றச்சாட்டின் பேரில் நான் தவறான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். அதற்கு முன்னர், கொழும்பிலிருந்த பல ஜே.வி.பி. தோழர்கள் இன அழிப்பின் போது என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு விளக்கமளித்திருந்தார்கள். தமிழர்கள் வாழும் இடங்களைக் கண்டறிந்து கொள்வதற்காக வாக்காளர் பட்டியல்களைப் பயன்படுத்துதல், தாக்குதல்களுக்கென கும்பல்களை அணி திரட்டுதல் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் என்பவற்றுக்குச் சொந்தமான வாகனங்களில் அவர்களை அந்தந்த இடங்களுக்கு எடுத்துச் சென்றமை போன்ற விடயங்கள் எனக்குத் தெரிவிக்கப்பட்டன. கொழும்பு வீதிகளில் அத்தகைய கும்பல்கள் செய்த காரியங்களை தனிப்பட்ட ரீதியில் பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இந்த இன அழிப்பின் போது ஐயாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தமிழ் சிவிலியன்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டதுடன், பல நூற்றுக் கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். மேலும், ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்ததுடன், சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த போது ஒரு சிலர் கொல்லப்பட்டார்கள். கும்பல்கள் ஒரு சில தமிழ் மக்களை உயிருடன் எரித்தன. பல நூற்றுக்கணக்கான பெண்கள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ் சிவிலியன்களின் வீடுகள், வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் போன்ற சொத்துக்கள் தாக்கி அழிக்கப்பட்டதுடன், பாதுகாப்புப் படையினரின் கண்களுக்கெதிரிலேயே அவை தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. வணிகத் துறை தலைவர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஏனையோர் ஆகியோரை உள்ளடக்கிய 200,000 க்கும் மேற்பட்ட சிவிலியன்கள் இடம்பெயர நேரிட்டதுடன், வேறிடங்களில் அவர்கள் தஞ்சம் புகுந்தார்கள். பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார்கள் அவர்களில் ஒரு சிலர் இன்னமும் இந்திய அகதி முகாம்களில் மிகவும் வசதிகளற்ற நிலைமைகளின் கீழ் வாழ்ந்து வருகின்றார்கள்.

அரசியல் யாப்புக்கான ஆறாவது திருத்தம் நிரூபித்துக் காட்டியதைப் போல அரசாங்கம் தொடர்ந்தும் அதிகளவில் எதேச்சாதிகார இயல்பையும், பொறுப்புக் கூறாத இயல்பையும் முன்னெடுத்து வந்தது. இந்த ஆறாவது திருத்தம் தமிழீழம் தொடர்பான கோரிக்கையை சட்ட விரோதமான ஒரு செயலாக ஆக்கியதன் மூலம் நாடாளுமன்றத்திலிருந்த தமிழ் தலைவர்களை அங்கிருந்து வெளியேற்றியது. கறுப்பு ஜூலை 1983 நிகழ்வை அதன் போர் முயற்சியை தீவிரப்படுத்துவதற்கும், சட்டபூர்வமாக்குவதற்கும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான ஒரு முயற்சியாக நோக்க முடியும். இந்த இன அழிப்பின் பின்னர் வடக்கு கிழக்கில் அடிக்கடி தொடர்ச்சியாக கொடூரமான சம்பவங்கள் நிகழத் தொடங்கின. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 2009 மே மாதம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டதுடன் இணைந்த விதத்தில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. ஆனால், போருக்கு வழிகோலிய காரணங்கள் இன்னமும் அதே விதத்தில் இருந்து வருகின்றன.

இனப் படுகொலையைத் தடுத்தல் மற்றும் அதற்கு தண்டனையளித்தல் தொடர்பான ஐ.நா. சமவாயத்தில் இலங்கையும் கையொப்பமிட்டிருக்கின்றது. இந்தச் சமவாயம் இனப் படுகொலை என்பதற்கு ஒரு தேசிய இனத்துவ, இன அல்லது சமயக் குழுவை முழுமையாக அல்லது ஒரு பாகமாக அழிப்பதனை நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் ஒரு செயல் என வரைவிலக்கணம் வழங்குகிறது. இலங்கையில் இனப் படுகொலை இடம்பெறவில்லை எனக் கூறுபவர்கள் அதனை பொய்யென நிரூபித்துக் காட்டுவதற்கு எவையேனும் விடயங்களையோ அல்லது சம்பந்தப்பட்ட வாதங்களையோ ஒருபோதும் முன்வைத்திருக்கவில்லை. இந்த வரைவிலக்கணம் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமை, அரச சிறைக்கூடங்களில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை, தமிழ் மக்களின் கலாசார சமய அடையாளங்கள் அழிக்கப்பட்டமை, வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள் விநியோகத்தைத் தடுக்கும் நோக்கிலான பொருளாதார தடைகள் போன்ற அமுல் செய்யப்பட்ட கொள்கைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட செயன்முறைகள் என்பவற்றின் நோக்கம் இங்கு கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். 1983 ஜூலை மாதத்தில் திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்ட தமிழர் இன அழிப்பு மற்றும் அதன் பின்னர்

> **“ தற்போதைய இனத்துவ மற்றும் சமய பதற்றங்களினால் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதார கட்டமைப்பு ரீதியான மற்றும் அரசியல் ரீதியான சவால்களுடன் இணைந்த விதத்தில் இலங்கையின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே இருந்து வருகின்றது.**

அரசினால் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படாத செயல்கள் என்பனவும் அந்த விவரணத்தின் கீழ் வருகின்றன.

ஜனாதிபதி ஜெயவர்தனவும், அவருடைய அரசாங்கமும் இன அழிப்புக்கான பழியை சிங்கள மக்கள் மீது போட்டாலும் கூட, தீவிரவாதிகளினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த வன்முறைக் கும்பல்களின் தாக்குதல்களை எதிர்கொண்ட மக்களுக்கு தஞ்சமளிப்பதற்கும், அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்கும் தமது உயிரைப் பணயம் வைத்து பல சிங்களவர்கள் முன்வந்திருந்தார்கள். தேசிய தீவிரவாதிகள் இந்த வன்முறைக்கு ஆதரவளித்திருக்க முடியும் ஆனால், பெரும்பாலானவர்கள் எதனையும் செய்ய முடியாத நிலையில் வெறும் பார்வையாளர்களாக இருந்து வந்தது போல் தெரிகிறது. எவ்வாறிருப்பினும், இந்த வன்முறை சர்வதேச சமூகத்தின் - இந்தியா மற்றும் அதன் மக்களின் - கவனத்தை ஈர்த்தது. அரசாங்கத்தின் மீதான அவப் பெயர் அகற்றுவதற்கென அது ஒட்டுமொத்தமாக சிங்கள மக்கள் மீது அதற்கான பழியைப் போட்டதுடன், அதன் பின்னர் ஒரு சில இடதுசாரி அரசியல் அமைப்புக்களையும் குறை கூறியது.

இன அழிப்பின் காரணமாக பத்து இலட்சம் தமிழர்கள் இடம்பெயர்ந்தார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாடுகளில் முக்கியமாக மேலைய நாடுகளில் குடியேறினார்கள். மருத்துவம், பொறியியல், கணக்கீடு, ஆசிரியர், சட்டம் மற்றும் வர்த்தகம் போன்ற பன்முக அறிவுத்துறைகளைச் சேர்ந்த தொழில்வாண்மை நிபுணர்களாக அவர்களில் பலர் இருந்தார்கள். அதன் விளைவாக, இலங்கை அதன் சமூக அபிவிருத்திக்கான அந்த மக்கள் பிரிவினரின் பங்களிப்புக்களை இழந்தது. இலங்கையின் இழப்புக்களிலிருந்து பல நாடுகள் பயனடைந்தன. தாம் புதிதாக குடியேறிய நாடுகளின் அபிவிருத்திக்கு அத்தகைய தொழில்வாண்மையாளர்கள் பரந்தளவிலான பங்களிப்பை வழங்கினார்கள். இலங்கை தமிழ் இளைஞர்கள் மட்டும் அத்தகைய நிலைமாற்றத்தை எதிர் கொண்டிருக்கவில்லை. சிங்கள மற்றும் முஸ்லிம் இளை ஞர்களும் அரச பயங்கரவாதத்துக்கு உள்ளாக்கப்பட்டி ருந்தார்கள்.

எனக்குத் தெரிந்த வரையில் கறுப்பு ஜூலை இன அழிப்பு அல்லது அதற்கு முன்னரும், பின்னரும் நாட்டின் பல்வேறு பாகங்களில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்து வினைத்திறன் மிக்க புலன்விசாரணைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான அலுவலகம் போன்ற பெருந்தொகையான பொறிமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அப்பொறிமுறைகள் ஒரு சில பிரச்சினைகளை ஓரளவுக்குக் கவனத்தில் எடுத்திருக்க முடியும். ஆனால், இந்த ஆணைக் குழுக்களினால் குறிப்பிட்டு கூறும் அளவுக்கு எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இறுதியில் இப்பொறிமுறைகள் செயல்முடக்கமடைந்தன. ஆணைக்குழுக்களின் பக்கச்சார்பான உருவாக்கம், பல்வேறு அரசாங்கங்கள் அரசியல் ரீதியாக மேற்கொண்ட தலையீடுகள் என்பனவே இதற்கான காரணமாகும். அது தவிர, இன முரண்பாட்டின் ஒரு சில பிரச்சினைகளை கவனத்தில் எடுப்பதற்கென முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக ஓர் உதாசீன உணர்வும் காணப்பட்டது. நிபுணர்களைக் கொண்ட ஐ நா குழு, மனித உரிமைகள் குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இந்தப் பொறிமுறைகள் குறித்து விமர்சனங்களை முன்வைத்துள்ளன. அவற்றின் வரையறுக்கப்பட்ட பணிப்பாணைகள், சுயாதீனம் குறைவாக இருந்த நிலை மற்றும் குறைந்தபட்ச சர்வதேச தரநியமங்களை நிறைவேற்றி வைக்கத் தவறியமை அல்லது சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியமை போன்ற காரணங்களாலேயே இந்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனது 2017 பெப்ரவரி அவுஸ்திரேலிய விஜயத்தின் போது, மீண்டும் நாடு திரும்பி, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவுமாறு புலம்பெயர் சமூகத்தினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். தான் ஓர் அமைச்சராக இருந்து வந்த 1980 களின் அரசாங்கம் முதலாவது தமிழ் தலைமுறையினருக்கும், இரண்டாவது சிங்கள தலைமுறையினருக்கும் நிகழ்த்திய சேதம் குறித்து அவர் அறிந்திருந்தாரா? அல்லது அது குறித்த ஒரு விளக்கத்தை கொண்டிருந்தாரா? இந்த இரு தரப்பினரும் தலைமுறைகளுக்கிடையிலான பேரதிர்ச்சியின் விளைவாக தமது தாய் நாட்டிலிருந்து வெளியேற நேரிட்டது. அந்தப் பேரதிர்ச்சி எதிர்கால தலைமுறையினருக்கும் கடத்தப்படுமா?

அவர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டுமென அரசாங்கம் எவ்வாறு வெறுமனே கேட்டுக் கொள்ள முடியும்? இது அவர்கள் நாடு திரும்புவதற்கு உசிதமான நிலைமைகளை நாட்டில் உருவாக்குவதற்கென நிலவரங்களை கவனத்தில் எடுக்காது விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளாகும். பலர் அவ்விதம் நாடு திரும்புவதற்கான அவாவைக் கொண்டிருப்பதுடன், தமது தாய்நாட்டு மக்களுக்கு சேவையாற்றும் விருப்பினையும் கொண்டுள்ளார்கள். ஆனால், நாட்டு நிலவரங்கள் அவ்வாறு அவர்கள் திரும்பி வருவதற்கு உசிதமானவையாக இருந்து வரவில்லை. தமது இனத்துவம், மொழி மற்றும் சமயம் என்பன என்னவாக இருந்து வந்தாலும், அனைத்து மக்களும் ஒப்புரவுடனும், சமத்துவத்துடனும், கண்ணியத்துடனும் நடத்தப்படும் சகிப்புத்தன்மை, ஒத்துணர்வு, பத்திரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றைக் கொண்ட ஒரு சூழலை அரசாங்கம் இன்னமும் உருவாக்கவில்லை. அதே போல, அதற்கு உசிதமான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார சூழலொன்று உருவாக்கப்படவுமில்லை.

ஆயுதப் போராட்டத்தின் முடிவின் பின்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் அதன் மூலம் தமக்கு பொருளாதார பயன்கள் கிட்டும் என எதிர்பார்த்தார்கள். ஆனால், சமூக - பொருளாதார மற்றும் அரசியல் அனுகூலங்கள் பெருமளவுக்கு மேல்தட்டு மக்களை நோக்கிச் சென்ற காரணத்தினால் சாதாரண மக்களின் அத்தகைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை. இன

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஜுலை 83 தமிழின அழிப்பு:

அழிப்பு ஏற்படுத்திய சேதங்கள் தொடர்பாக அரசு முற் றுமுழுதாக நட்ட ஈடுகளை வழங்கவில்லை. இந்த இன அழிப்பு ஒரு பாரிய குடிசனவியல் நகர்வை தூண்டியது டன், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வடக்கு கிழக் குக்கு வெளியில் மீள் குடியமர்ந்தார்கள். சுமார் 150,000 தமிழர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றார்கள்.

1983 ஜூலை இன அழிப்பு தென்னிலங்கையில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்கு கடும் பாதிப்பை எடுத்து வந்தது. அவர்கள் தமிழர்களாக இருந்து வந்ததே அதற்கான ஒரேயொரு காரணமாகும். தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு மற்றும் ஏனைய பெரு நகர மையங்களில் தமிழர்களின் பொருளாதார அடித்தளத்தை நிர்மூலமாக்குவதும், அந்தப் பொருளாதார அடித்தளத்தை சிங்கள ஆளும் மேட்டுக்குடியினர், அவர்களுடைய தோழமைக் குழுக்கள் மற்றும் அடிவருடிகள் ஆகியோர் சட்ட விரோதமாக, கொடூரமாகக் கைப்பற்றச் செய்வதுமே இதன் நோக்கமாக இருந்து வந்தது. (அவ்வாறு சட்ட ரீதியாக செய்ய முடியுமாக இருந்தால்) தான் விரும்பும் எந்தவொரு இடத்திலும் ஒரு தொழிலை மேற்கொள்வதற்கான உரிமையை நல்லிணக்கம் நிலவும் இலங்கையில் ஒவ்வொரு பிரஜையும் கொண்டிருத்தல் வேண்டும். இந்த இன அழிப்பு அடிப்படையில்- தமிழர்களாக, முஸ்லிம்களாக அல்லது செட்டி சமூகத்தினராக எந்த இனத்தவராக இருந்தாலும் - ஏனைய தேசிய இனங்களின் பொருளாதார வாழ்வாதாரங்கள் மற்றும் வணிகங்கள் என்பவற்றை அழித்தொழிப்பதற்கென சிங்கள ஆளும் மேட்டுக்குடியினரால் தொடுக்கப்பட்ட ஒரு பொருளாதார போர் தவிர வேறெதுவுமல்ல என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இந்த இன அழிப்பும், அதன் விரிவாக்கமாக சுமார் முப்பது வருடங்கள் நீடித்த ஆயுதப் போராட்டமும் தெற்கிலும், வடக்கிலும் தமிழர் பொருளாதார அடித்தளத்தை மேலும் நிர்மூலமாக்கின. எனவே, தமிழ் சமூகம் அதிகாரப் பகிர்வு, பன்முகப்படுத்தல் - பிரிவினை என்பவற்றைக் கூட - கோருவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பேராசை, ஆற்றலின்மை, ஊழல் மற்றும் தீவிரவாதம் என்பவற்றின் ஒரு கூட்டு விளைவாக சுதந்திரத்தின் பின்னர் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. திருப்பிச் செலுத்த முடியாத கடன்களை அதிகரித்தளவில் பெற்றுக் கொள்ளும் நிலையுடன் இணைந்த விதத்தில் இலங்கை மேலும் மேலும் கடன் பொறிக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருந்தாத அரசு பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தருநர்கள் பெருந்தொகையினருடன் பல எதிர்கால தலைமுறையினரின் எதிர்காலத்தை அடகு வைத்திருக்கிறது.

இலங்கை தற்பொழுது கடந்து செல்வதைப் போன்ற தற்காலிக மற்றும் குறுங்கால நிவாரண நிலைமைகளுக்கும் மத்தியிலும் கூட, அடிப்படை கட்டமைப்பு ரீதியான காரணங்கள் இன்னமும் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்ந்தும் இலங்கையின் எதிர்காலத்தின் மீது அச்சமூட்டும் ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கும். அரசு அதன் தற்போதைய தலைமைத்துவத்தின் கீழ் பொருளாதார நெருக்கடியையோ அல்லது தேசிய பிரச்னையையோ தீர்த்து வைக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், இந்த இரண்டு பிரச்சினைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும். கொந்தளிப்புடன் கூடிய ஒரு சமூகச் சூழ்நிலையைப் பராமரித்து வருவது ஆளும் மேட்டுக்குடியினருக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும், அடிவருடிகளுக்கும் தமது வழமையான ஊழல் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கும்.

அறகலய மக்கள் இயக்கம் ஒரு சிறந்த ஜனநாயக ஆட்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சகிப்புத் தன்மையுடன் கூடிய ஒரு சமுதாயம் என்பவற்றுக்கான பெரும்பாலான இலங்கை மக்களின் அபிலாசைகளின் ஒரு வெளிப்பாடாகும். ஆனால், அந்த அபிலாசைகளை சாதித்துக் கொள்ளும் விடயத்தில் அரசு பாரிய இடையூறுகளை கட்டியெழுப்பி வரும் நிலையில் அவை இன்னமும் நிறைவேறியிருக்கவில்லை. இந்நிலைமைக்கு மத்தியிலும் கூட, ஒரு சிறந்த, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய இலங்கைத் தேசத்துக்கென போராடுவதற்கு பல வாய்ப்புக்கள் இருந்து வருகின்றன. மக்களின் அபிலாசைகளை முறியடிப்பதற்கென ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் காலனித்துவ கட்டமைப்புக்களை அழித்தொழிப்பதற்கு நாடும், அதன் பன்முகச் சமூகங்களும் ஒன்றாக இணையும் சந்தர்ப்பத்தில் அதனை சாதித்துக் கொள்ள முடியும்.

பொருளாதாரத்தின் இயல்பு மற்றும் அரசின் வடிவம் என்பவற்றின் அடிப்படையில் தம் மீது திணிக்கப்பட்டிருக்கும் அத்தகைய காலனித்துவ கட்டமைப்புக்களை அகற்ற வேண்டுமென மக்கள் தீர்மானித்தாலேயொழிய தொடர்ந்தும் எதிர்காலம் இருள்மயமானதாகவே இருந்து வர முடியும். பல்வேறு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் என்பன முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், முரண்பாடுகளை தூண்டிய மூல காரணங்கள் போதியளவில் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட பணிப்பாணைகளும், அரசியல் தலையீடுகளும் இது தொடர்பான முன்னேற்றத்தை தடுத்து வருகின்றன. தற்போதைய இனத்துவ மற்றும் சமய பதற்றங்களினால் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் பொருளாதார கட்டமைப்பு ரீதியான மற்றும் அரசியல் ரீதியான சவால்களுடன் இணைந்த விதத்தில் இலங்கையின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே இருந்து வருகின்றது. அரசாங்கத்தினால் இடம்பெற்ற அத்துமீறல்கள் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்படுவதைத் தடுப்பதற்கான வசதியான ஒரு சாக்காக அத்தகைய பொறிமுறைகள் உருவாக்கப்பட்டனவா என்ற கேள்வியை இது எழுப்புகின்றது. அனைத்து கட்சித் தலைவர்களும் உடன்படுமிடத்து அரசியல் யாப்புக்கான 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படும் என்ற தற்போதைய அரசாங்கத்தின் பிரகடனத்தை இந்தப் பின்னணியிலேயே கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

இலங்கை பிரஜைகள் 1983 ஜூலை பேரனர்த்தச் சம்பவங்களை நினைவில் வைத்திருப்பதுடன், அத்தகைய வன்முறைச் சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழ்வதை தடுப்பதற்கும் முயற்சிக்க வேண்டும். ஒரு சிறந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக மக்கள் ஒன்றாக இணைந்து, பிரிவினை மற்றும் ஏற்றத்தாழ்வு என்பவற்றை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டிருக்கும் காலனித்துவ கட்டமைப்புக்களை நிர்மூலமாக்க வேண்டும். சமூக நீதி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றுடன் கூடிய நல்லிணக்கம் நிலவும் தேசமொன்றுக்கான பாதையை நிர்மாணிப்பதற்கு இன, மொழி, மதப் பேதங்களை மறந்து அனைத்து பிரஜைகளினதும் ஒரு கூட்டு முயற்சி தேவைப்படுகின்றது. அந்த நிலையில் மட்டுமே இலங்கை பெருமளவுக்கு அனைவரையும் உள்ளடக்கிக் கொண்ட ஒரு தேசமாக, வளமார்ந்த ஓர் எதிர்காலத்தை நோக்கி உண்மையில் நகர்ந்து செல்ல முடியும்.






# கிழக்கு மாகாண வைத்தியர்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வு

திருமலை, ஓக.03

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு பிராந்திய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.**

இச் சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது வைத்தியர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்னைகள் குறித்து ஆரயபட்டதுடன்.

இதன்போது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.



இச் சந்திப்பில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி எஸ்.முரளிதரன் கலந்துகொண்டார். (அ)

# காத்தான்குடியில் இயந்திரத்தை திருடியவர்களுக்கு விளக்கமறியல்!

மட்டக்களப்பு, ஓக. 03

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பிரதேசத்தில் பாரிய இயந்திரத்தை கொள்ளையிட்ட இரண்டு இளைஞர்களை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதவான் எஸ். தியாகேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனுமார் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரிய கட்டடங்களுக்கான சீமந்து கலவை இயந்திரத்தில் உள்ள பாரிய இயந்திரத்தை திருடியமைக்காகவே மேற்படி இளைஞர்கள் காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பல லட்சம் ரூபாய் பெறுமதியான பாரிய இயந்திரத்தை நாவற்குடா பிரதேசத்தை சேர்ந்த 21 மற்றும் 22 வயதை சேர்ந்த இளைஞர்கள் திருடி இருந்தனர்.

குறித்த குற்றச்சாட்டின் பேரில் மேற்படி இளைஞர்கள் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ எம் எஸ் ஏ ரஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் விசாரணை நடத்திய பின்னர் மட்டக்களப்பு பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது 8ஆம் திகதி வரை விளக்கமறையில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார் குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மட்டக்களப்பு உற்பத்தியாளர்களின் சுயதொழில் விற்பனைக் கண்காட்சி



மட்டக்களப்பு, ஓக. 03

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினால் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனையும் கண்காட்சியும் உதவி பிரதேச செயலாளர் ல.பிரசாந்தன் தலைமையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கண்காட்சியில் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சுய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருட்களை கொள்வனவிலும் ஈடுபட்டனர்.

இக்கண்காட்சி வருடம் தோறும் மூன்று அல்லது நான்கு தடவைகள் நடைபெறுவது வழக்கம். (அ)

# வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு!

அம்பாறை, ஓக. 03

வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை ஆதார வைத்தியசாலையின் மனநோய் சிகிச்சைப்பிரிவு விடுதியில் இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மத்திய முகாம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஏ.சி.எம் ஆபீத் என்ற திருமணமான இளைஞனே உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்தவர் மனநோய் சிகிச்சைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலையின் மனநோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். இதன் பின்னர் மரணமடைந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# திருமலையில் விபசார விடுதி ஊர்மக்களால் சுற்றிவளைப்பு!

திருமலை, ஓக. 03

திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கன்னியா பிரதேசத்தில் இலுப்பைக்குள வீதியில் நெடுங்காலமாக மறைமுகமாக இயங்கி வந்த விபச்சார விடுதி நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு அப்பிரதேச மக்களால் சுற்றிவைக்கப்பட்டதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றிவளைப்பின்போது விடுதியில் இரகசியமாக விபச்சாரத்தில் ஈடுபட்ட இருபெண்களை பிடித்து தம்மிடம் ஒப்படைத்ததாக உப்புவெளி பொலிஸார் கூறினர்.

குறித்த இரு பெண்களும் 25 மற்றும் 30 வயதினர் எனவும் அநுராதபுரம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இரு பெண்களையும் திருகோணமலை மாவட்ட பதில் நீதிவான் முன்னிலையிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கோணாவத்தை ஆற்றை அண்டி கண்டல் தாவரம் நடுகை ஆரம்பம்

அக்கரைப்பற்று, ஓக. 03

சர்வதேச கண்டல் தினத்தையொட்டி அக்கரைப்பற்று வட்டார வனவள காரியாலயத்தினால், அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றை அண்டிய பிரதேசங்களில் கண்டல் தாவரங்கள் நடும் வைபவம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்றது.

அக்கரைப்பற்று வனவள பிராந்திய வன அதிகாரி ஏ.எல். இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கோணாவத்தை ஆற்றை அழகுபடுத்தும் நோக்கில் இரு மருங்கிலும் கண்டல் தாவரங்கள் நடப்பட்டுள்ளன.



“எமது நாட்டைப் பொறுத்தவரை மக்கள் இயற்கையை மிகவும் மோசமான நிலைக்கு கொண்டுவந்துள்ளார்கள். இதனால் நாம் நாளாந்தம் பல்வேறு இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்டவர்களாக இருக்கின்றோம். சூழலைப் பாதுகாப்பது ஒரு நாட்டில் வாழும் பிரஜையின் கடமையாகும். எமது நாட்டின் சூழலைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு சிறந்த நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு நாம் ஒவ்வொருவரும் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்” என்று இல்யாஸ் கருத்து தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் சட்டவிரோத காடழிப்பு, சமூக விரோத செயல்கள் என்பன அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் எமது பிரதேசத்தின் இயற்கை வளங்கள் அழிந்து வருகின்றன. இதனை தடுப்பதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் கூறினார். (அ)

# மீன்பிடி படகுக்கு தீ வைப்பு



திருமலை, ஓக. 03

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இலங்கை துறைமுகத்துவாரம் பகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை அதிகாலை மீன்பிடிப் படகு ஒன்று இனம்தெரியாத நபர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது என ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த மீன்பிடி படகே இவ்வாறு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் மூலம் படகின் உரிமையாளர் பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மாற்றுவதற்கு முற்பட்டார் ட்ரம்ப்!

## மேலும் 4 குற்றச்சாட்டுகள் முன்வைப்பு

நியூயோர்க், ஓக. 03

**2020 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மாற்ற முற்பட்டமை தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.**

அமெரிக்காவை ஏமாற்றுவதற்காக சதி செய்தமை, சாட்சிகளைக் குழப்பியமை, அமெரிக்க பிரஜைகளின் உரிமைகளுக்கு எதிராக சதி செய்தமை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த குற்றப்பத்திரிகையானது 2021 ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட கப்பிட்டல் கலவரம் சார்ந்த விடயங்களின்



விசாரணைகளை உள்ளடக்கியுள்ளது.

மீளவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள 77 வயதான டொனால்ட் ட்ரம்ப் இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

இரகசிய அரச ஆவணங்களைத் தவறாகக் கையாண்டமை, நடிகை ஒருவருக்கு பணம் வழங்கியமை உள்ளிட்ட 2 குற்றச்சாட்டுகளை ட்ரம்ப் ஏற்கனவே எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்காவில் பிளாஸ்ரிக் பயன்படுத்த கடும் கட்டுப்பாடு

நியூயோர்க், ஓக. 03

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 32 கோடி தொன் பிளாஸ்ரிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. எனவே நியூயோர்க்கில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருட்களை பயன்படுத்த கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நியூயோர்க் நகரில் ஹோட்டல்கள் மற்றும் உணவு விநியோக நிறுவனங்களில் பிளாஸ்ரிக் பொருட்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவிக்கையில்,

“பிளாஸ்ரிக் பாத்திரங்கள், கரண்டி மற்றும் கத்தி போன்றவற்றை வாடிக்கையாளர் கேட்காமல் வழங்கக்கூடாது. இதனை மீறும் நிறுவனங்களுக்கு 20 ஆயிரம் வரையில் அபராதம் விதிக்கப்படும்.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 32 கோடி தொன் பிளாஸ்ரிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதில் 95 வீதமான குப்பைகள் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருட்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகளை குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது” -என்றார். (அ)

# ஆயிரக்கணக்கான புதிய கார்களுடன் எரியும் கப்பலை கட்டி இழுக்க முயற்சி!

## இந்திய மாலுமிகள் மீட்பு!! ஒருவர் பலி! சிலர் காயம்!



பாரிஸ், ஓக. 03

நெதர்லாந்தின் வட கடல் பகுதியில் ஆயிரக்கணக்கான புதிய கார்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த “ஃப்ரீமன்டில் ஹைவே” என்ற சரக்குக் கப்பலில் பெரும் தீ பரவியிருக்கிறது. கடந்த செவ்வாயன்று திடீரென ஏற்பட்ட தீ கட்டுக்கடங்காமல் பரவியதை அடுத்து அதிலிருந்த இந்திய நாட்டைச் சேர்ந்த 22 மாலுமிகளும் நெதர்லாந்தின் கரையோரப் படைகளால் ஒருவாறு மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் தீப் புகை காரணமாக உயிரிழந்தார். சிலர் காயமடைந்துள்ளனர்.

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த அந்தக் கப்பல் ஜேர்மனியின் ப்ரெமர்ஹாவன் துறைமுகத்தில் இருந்து எகிப்து நாட்டின் போர்ட் சாய்த் துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. பின்னர் அங்கிருந்து அது சிங்கப்பூர் பயணமாக இருந்தது. 200 மீற்றர் நீளமும் 18,500 தொன் எடையும் கொண்ட அதில் மூவாயிரத்து 783 புதிய கார்கள் ஏற்றப்பட்டிருந்தன. அவற்றில் 438 எலெக்ட்ரிக் கார்களும் அடங்கும்.

அந்தக் கப்பலை வாடகைக்கு அமர்த்தியிருந்த “கே லைன்” என்ற போக்குவரத்துக் கம்பனி இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது.

கப்பலில் தீப்பிடித்தமைக்கான காரணம் தெரியவில்லை. ஆனால் நெதர்லாந்து செய்தி ஊடகங்களின் தகவலின்படி எலெக்ட்ரிக் கார்களில் ஒன்றின் பற்றரியில் இருந்தே முதலில் தீ பரவியிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

தீயை அணைப்பதற்காக வீசப்பட்ட தண்ணீர் கப்பலை நிலைதளம்பச் செய்ததன் காரணமாக அந்த முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டன.

வடகடலுக்கும் வாடன் கடலுக்கும் இடையே நெதர்லாந்தின் ரேர்செலிங் தீவிலிருந்து 18 கிலோமீற்றர்கள் தொலைவில் எரிகின்ற அந்தக் கப்பலில் இருந்து வாகனங்களது எரிபொருள் மற்றும் நச்சுப் பதார்த்தங்கள் கடலில் கலக்கத் தொடங்கியிருப்பதாக அஞ்சப்படுகிறது. கப்பல் தரித்துள்ள கடற்பகுதி யுனெஸ்கோவால் உலகின் பாரம்பரியம் மிக்க பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடமாகும். அத்துடன் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நீர்வாழ், நிலம் வாழ் உயிரினங்கள் நிறைந்த பகுதியுமாகும். எரிகின்ற கப்பலால் அங்கு ஏற்படக்கூடிய பேரழிவைத் தவிர்ப்பதற்காகக் கப்பலை அந்த இடத்தில் இருந்து வேறு ஒரு பகுதிக்கு நகர்த்துவதற்காக அதனைக் கட்டி இழுக்கும் தீவிரமான பணி தொடக்கப்பட்டுள்ளது.

எலெக்ட்ரிக் கார்களது பற்றறிகள் அவற்றை நீண்ட தூரம் நகர்த்தும் பயணங்களின்போது தீப் பற்றும் ஆபத்து இருப்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதால் பற்றறிகள் தொடர்பான பாதுகாப்பு விதிகள் மேலும் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# ஓகஸ்ட் மாதத்தில் குளிரும் மழையுமான காலநிலை!

## பிரான்ஸ் கோடை விடுமுறைப் பயணங்கள் பாதிப்பு

பாரிஸ், ஓக. 03

கடும் கோடை மாதமாகிய ஓகஸ்ட்டில் நாட்டின் பெரும் பகுதிகளில் குளிரும் மழையுமான பருவநிலை காணப்படுகிறது. சில மாவட்டங்களில் இடிமின்னலுடன் கூடிய புயல் மழையும் ஏற்பட்டுள்ளது.

பாரிஸ் பிராந்தியம் அடங்கலாக நாட்டின் வட பெரும் பிரதேசத்தில் வெப்பம் தணிந்து குளிரும் மழையும் -

தென்பகுதிகளில் வெயிலும் கடும் வெப்பமும் இடிமின்னல் மழையும் கலந்த சீதோஷண நிலையும் - காணப்படுகிறது.

ஓகஸ்ட் மாதத்தின் முதல் இரண்டு வாரங்கள் இந்த நிலைமை நீடிக்கும் என்று பிரான்ஸின் வானிலை அவதான நிலையம் தெரிவிக்கிறது.

குழப்பமான இந்தக் கால நிலை கோடை விடுமுறைப் பயணங்களை அனுபவிப்பவர்களினதும், உணவகங்கள் போன்ற வர்த்தகத் துறையினரதும் மன நிலையில் பெரும் தாக்கம் செலுத்துகின்றது. பாரிஸ் நகர



வாசிகள் சுவெற்றர் அணிந்து குடையுடன் வெளியே நடமாட வேண்டி உள்ளது. பூங்காக்களிலும் பொது இடங்களிலும் வெயிலை அனுபவிக்க முடியாதுள்ளது என்று பாரிஸ்வாசி ஒருவர் ஆதங்கப்படுகிறார். கடும் வெயிலுக்குக் களை கட்டும் வியாபாரம் குளிர்மையான நேரங்களில் மந்தமாகி விடுகிறது என்கிறார் உணவக உரிமையாளர் ஒருவர். விடுமுறைகால கொட்டகைகளில் தங்கியிருப்பவர்களையும் மழைக் காலநிலை பாதித்துள்ளது.

இதேவேளை, இந்த முறை ஐரோப்பாவைக் கடும் வெப்பம் பாதித்துள்ளது என்பதை அறிக்கைகள் காட்டுகின்றன. இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல், கிரேக்கம், சுவிஸ் போன்ற நாடுகள் வெப்ப அனலையும் அதன் விளைவான காட்டுத் தீயையும் சந்தித்துள்ளன. கடந்த ஜூலை மாதம் உலகம் முழுவதும் கடும் வெப்பம் பதிவான மாதம் என்று பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது. (அ)

# சீன வெளிவிவகார அமைச்சரை தம் நாட்டுக்கு அழைக்கும் அமெ.!

நியூயோர்க், ஓக. 03

சீனாவின் புதிய வெளிவிவகார அமைச்சரான வாங் யீயை தமது நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளுமாறு அமெரிக்கா முறைப்படி அழைப்பு விடுத்துள்ளது.

உலகில் பிரதான இரு வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவிவரும் நிலையிலேயே, இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளமை அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது. அந்த அழைப்பை அவர் ஏற்பார் எனவும் நம்புகின்றது. எனினும், பயணத்துக்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

சீன வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட குய்ன் காங் திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள விவகாரம் இராஜதந்திர மட்டத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

கடந்த மார்ச் 12 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்ற குய்ன் காங் சீன வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் வேண்டும் என வலியுறுத்திவந்தார். இதனால், அவருக்கும் சீன ஜனாதிபதி ஜின்பிங்கிற்கும்இடையில் கருத்து மோதலும் ஏற்பட்டது.

இந்நிலையில் குய்ன் காங் ஓரங்கட்டப்பட்டு வந்தார். சர்வதேச மாநாடுகளிலும் பங்கேற்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து அவர். விலக்கப்படுவதாகவும், அவருக்குப் பதிலாக ஏற்கெனவே வெளிவிவகார அமைச்சராக இருந்த வாங் யீ நியமிக்கப்படுவதாகவும் கடந்த 25 ஆம் திகதி சீனா அறிவித்தது.

இருதரப்பு நல்லுறவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கன் உள்ளிட் டோர் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டு, நாடு திரும்பி இருந்த நிலையிலேயே சீனா, வெளிவிவகார அமைச்சரை மாற்றியிருந்தது.

இந்நிலையிலுயே புதிய வெளிவிவகார அமைச்சரவை சந்திப்பதற்கு அமெரிக்கா தயாராகி வருகின்றது. (அ)

# ராமர் சேது பாலத்திற்கு பதிலாக வேறு பாதை!

## ஆராய்கிறது இலங்கை

கொழும்பு, ஓக. 03

**இலங்கை ராமர் சேது பாலத்திற்கு பதில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் புதிய வேறு நிலத்தொடர்பை ஏற்படுத்துவது குறித்து ஆராயவுள்ளது என்று தென்னிலங்கை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இந்து மத உணர்வுகளை தவிர்ப்பதற்காக இலங்கை இவ்வாறு சிந்தித்து வருகின்றது என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை ஜனாதிபதியின் சமீபத்தைய இந்திய விஜயத்தின் போது இலங்கை துறைமுகங்களுடன் தொடர்பை அதிகரிப்பதற்காக தரை ரீதியிலான தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டது.

நீண்ட காலத்திற்கு முன்னர் இதேயோசனை முன்வைக்கப்பட்டவேளை ராமர் சேது பாலம் அல்லது ஆதாமின் பாலத்தை உருவாக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

இராவணணின் பிடியிலிருந்த சீதையை காப்பாற்றுவதற்காக ராமர் இலங்கை நோக்கி பயணித்தவேளை உருவாக்கப்பட்டது இந்த பாலம் என்பது புராணம்.

இந்தியாவில் சேதுசமுத்திர திட்டத்திற்கு சில தரப்பினர் சூழல் ஆர்வலர்கள் சில இந்துக் குழுக்கள் போன்றவை கடும்



எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றன- இந்திய நீதிமன்றம் அதற்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான தரைதொடர்பை ஏற்படுத்துவதற்காக புதிய பாதையொன்றை உருவாக்குவது குறித்து ஆராயப்படும் என தெரிவித்துள்ள விடயமறிந்த வட்டாரங்கள் இராமர் சேது பாலத்தை விட இது நீளமாக காணப்படும் என தெரிவித்துள்ளன.

(அ)

# கொக்குவில் பகுதியில் வயோதிபரின் சடலம்!

யாழ்ப்பாணம், ஓக. 03

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்துக்கு அருகில் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

ஆலய வீதியில் உள்ள சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள அறையில் குறித்த வயோதிபர் தனிமையில் தங்கியிருந்துள்ளார்.

வழமையான அவருடைய நடமாட்டம் இல்லாதிருந்தமையால், அவர் தங்கியிருந்த அறைக்குச் சென்று பார்த்தபோது உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ)

# நிதி, பொருளாதார அமைச்சின் கீழ் வந்துள்ள இரு அரச நிறுவனங்கள்!

கொழும்பு, ஓக. 03

இரு அரச நிறுவனங்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

'சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்' மற்றும் தேசிய இயந்திர உபகரண நிறுவனம் ஆகியனவே இவ்வாறு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

'சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்' இதற்கு முன்னர் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழும் தேசிய இயந்திர உபகரண நிறுவனம் முன்னர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழும் செயற்பட்டன. (அ)

# ஒக்ரோபர் வரை போதிய மழைவீழ்ச்சி கிடைக்காது

கொழும்பு, ஓக. 03

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரை போதியளவு மழைவீழ்ச்சி பதிவாகாது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பருவப் பெயர்ச்சியின் போதும் போதியளவு மழை பெய்யவில்லையென திணைக்களத்தின் பணிப்பாளர் ஷிரோமணி ஜயவர்தன கூறினார்.

இதனிடையே, நாட்டில் தற்போது நிலவும் வறட்சி காரணமாக நீரேந்துப் பகுதிகளின் நீர் மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 33.3 வீதம் வரை குறைடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் சுதர்ஷனி விதான பத்திரண தெரிவித்துள்ளார்.

மகாவலி ஆற்றின் கொள்ளளவு 34 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக மகாவலி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மொத்த மின் உற்பத்தியில் நீர் மின் உற்பத்தியின் பங்கு 16 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 20 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், நாளாந்த மொத்த மின் உற்பத்தியின் 64 வீதம், நிலக்கரி மற்றும் எரிபொருள் மூலமாகவே பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

நாளாந்தம் சூரிய சக்தியின் மூலம் 5 வீதமும் காற்றாலைகளின் மூலம் 6 வீதமும் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்படுகின்றது.

இந்தநிலையில், நாட்டின் மின்சாரத்திற்கான கேள்வி மணித்தியாலத்திற்கு 48 கிகாவாட் வரை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# 60 வீத கைதிகள் போதைப்பொருள் குறித்த குற்றச்செயல்களுடன் தொடர்புடையோர்!

கொழும்பு, ஓக. 03

சிறைச்சாலைகள் திணைக்களம் இலங்கை சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளில் 60 வீதமானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக நாட்டிலுள்ள சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை 29000 ஆக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், மேலதிக ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கையின் 2 மடங்காகும் என அவர் கூறினார்.

சிறைச்சாலைகளில் நெரிசலை குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி, கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவிடம் வினவிய போது, 20 வருடங்களுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளை புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் விடுதலை செய்வது தொடர்பில் ஆலோசித்து வருவதாக கூறினார்.

சிறைக்கைதிகளின் உணவு தேவைக்காக மாத்திரம் வருடாந்தம் 5.5 பில்லியன் ரூபா செலவிடப்படுவதாக அமைச்சர் விஜயதாச தெரிவித்தார்.

(அ)

# இ.போ.ச. சாரதிகளால் இழைக்கப்படும் தவறுகளை ஆவணமாக்குவதற்கு திட்டம்

கொழும்பு, ஓக. 03

இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகளினால் இழைக்கப்படும் தவறுகளை ஆவணப்படுத்தும் திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விபத்துகளைத் தடுத்து, பாதுகாப்பான போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் கீழ் சாரதிகளுக்கு தகுதிப் பரிசோதனை புத்தகமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் விபத்துக்குள்ளாவதை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் விபத்து விசாரணைப் பிரிவின் முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 218 பஸ்கள் விபத்திற்குள்ளாகியுள்ளதாக அவர் கூறினார்.

இவ்வாறு பதிவாகிய 19 கோர விபத்துகளில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துகள் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபை வருடமொன்றுக்கு 30 தொடக்கம் 40 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை செலுத்தவேண்டி ஏற்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் விபத்து விசாரணைப் பிரிவின் முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

# கிளிநொச்சி ம.வி மாணவரால் சுற்றாடல் பாதுகாப்பு பணிகள்

கிளிநொச்சி, ஓக. 03

கிளிநொச்சி மகாவித்தியாலய சமூகத்தினரால் சுற்றாடல் பாதுகாப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் கிளிநொச்சி மகாவித்தியாலய சாரணிய குழுவினால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன.



கிளிநொச்சி ஏ-9 வீதியில் வீசப்பட்டு நீண்டகாலமாக காணப்பட்ட உக்காத பொலித்தீன் பொருட்கள் தொடர்பில் பலரும் கவலை தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், சாரணிய மாணவர்களின் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக வும், மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பிலான அறிவுசார் விருத்தியை வளர்க்கும் வகையிலும் குறித்த பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணி நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, பாடசாலை வரை சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் துப்பரவு செய்யப்பட்டது.

இந்த பணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை, கரைச்சி பிரதேச சபை, சுகாதாரத்துறையினர் ஒத்துழைப்பு வழங்கியதாக பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தெரிவித்தார்.

## மருத்துவ...

அதிகாரசபைக்கு அறிவுறுத்தினார். அந்த நோக்கத்திற்காக, தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, அத்தியாவசிய மருந்துகள் ஒழுங்காகவும் விரைவாகவும் கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இதன் போது அறிவிக்கப்பட்டது.

தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையில் காணப்படும் பணியாளர் பற்றாக்குறை ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது. மருத்துவ தயாரிப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும் பொது சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் பங்களிப்பை வலுப்படுத்த விரிவான அறிக்கை ஒன்றை கையளிக்குமாறும் ஜனாதிபதி இதன் போது அறிவித்தார்.

மருந்து விநியோகம் மற்றும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப் பட்டதுடன், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரை யாடலில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம், மருந்து வகைகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிப்பது தொடர்பில் உடனடி தகவல் வழங்கும் வகையில் இணையவழி முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான எளிய மற்றும் வெளிப் படையான கொள்முதல் செயல் முறையை தயாரிப்பதற்காக திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

மேலும், தாதியர் ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் தற்போதைய சுகாதார சேவைத் தேவைகளுடன் இணைந்து செல்லும் வகையில் சேவை யாப்பில் திருத்தம் செய்யுமாறு சுகாதார அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கலைத் துறையில் கற்ற தகுதியானவர்களை தாதியர் பணிக்கு இணைத்து பயிற்சியளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு சுகாதார அதிகாரி களுக்கு அறிவித்தார்.

மேலும், மருத்துவப் பொருட்களின் தரம், பாதுகாப்பு மற்றும் வினைத் திறனை மதிப்பிடுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரநிலை 4 தரநிலை களுடன் கூடிய ஆய்வக வசதிகளை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு மற்றும் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபை என்பவற்றுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இரண்டு வருடங்களுக்குள் காலாவதியாகும் அல்லது அகற்றப்படும் பயன்படுத்த முடியாத வைத்தியசாலை உபகரணங்களின் பட்டியலை உடன டியாக சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சுகாதார அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

அனைத்து குடிமக்களுக்கும் வலு வான மற்றும் அணுகக்கூடிய சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத் துடன் முன்மொழியப்பட்ட மறுசீர மைப்புகளை விரைவாக செயல்படுத் துவதற்கு இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து தரப்பினரும் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தினர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜனக்க சிறீ சந்திரகுப்த, சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன உட்பட சுகாதார அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் குழுவினர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

## தனிமையில்...

பொதுஜன பெரமுன அரசைக் கடு மையாக விமர்சித்தவர்களை அமைச்சரவையில் இணைத்துக கொண்டார்."

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

தேசிய பாதுகாப்பு,தேசியம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு 69 இலட்சம் மக்கள் கோட்டாபய ராஜபக்‌ஷவைத் தலைவராகத் தெரிவு செய்தார்கள். நெருக்கடியான சூழ்நிலையில் அவர் 69 இலட்சம் மக்கள் ஆணையைப் பாதுகாக்கவில்லை.

பொதுஜன பெரமுன மீது நாட்டு மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, 69 இலட்சம் மக்கள் ஆணை என்பன பலவீனமடையக் கூடாது என்பதற்காகவே அரசமைப்பின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னர் நாட்டில் உண்ண உணவு இல்லாமல் எவரும் நெருக்கடிக்குள்ளா கவில்லை. வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் எரிபொருள், எரிவாயு விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டது.

பொதுஜன பெரமுன தலைமை யிலான அரசைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டில் எமது அமைச்சரவை உறுப்பினர்கள் முன்னிலை வகித்தார்கள்.

எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு, மின்விநியோகத் துண்டிப்பு ஆகிய காரணிகளால் நாட்டில் பாரிய நெருக்கடி ஏற்பட்டது. பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

மாறாக ராஜபக்‌ஷக்களிடமிருந்தும், பொதுஜன பெரமுனவில் இருந்தும் தனித்துச் செயற்படுவதாக மக்களுக்குக் காண்பிக்கும் வகையில் தனித்துச் செயற்பட்டார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசைக் கடுமையாக விமர்சித்த விஜயதாஸ ராஜபக்‌ஷ, சுசில் பிரேமஜயந்த, விதுர விக்கிரமநாயக்க, ரொஷான் ரணசிங்க ஆகியோரை இறுதிக்கட்டத்தில் அமைச்சரவையில் இணைத்துக்கொண்டார்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட தலைவர்களின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் பஸில் ராஜபக்‌ஷவை நிதி அமைச்சர் பதவியில் இருந்தும், மஹிந்த ராஜபக்‌ஷவைப் பிரதமர் பதவியில் இருந்தும் விலகுமாறு கோட்டாபய வலியுறுத்தினார்.

நிறைவேற்று அதிகாரத்தின் தீர்மானத்துக்கு மதிப்பளித்து அவர்கள் பதவி விலகினார்கள். கடந்த வருடம் ஜூன் 09 ஆம் திகதி போராட்டத்தின் போது கோட்டாபயவின் அருகில் இருந்தவர்கள் அனைவரும் அவரை விட்டுச் சென்றார்கள்.

நெருக்கடியான நிலையில் பஸில், மகிந்த ஆகியோர் மாத்திரமே அவரைப் பாதுகாத்தார்கள். ஆகவே, பொதுஜன பெரமுன முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை ஒருபோதும் தனிமைப்படுத்தவில்லை-என்றார். (அ)

# வல்வைப் படுகொலைகளின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல்



வடமராட்சி, ஓக. 03

1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2ஆம் திகதி வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தால் 63 தமிழ் பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் எரித்தும் கொல்லப் பட்டனர்.

அவர்களை நினைவுகூரும் நினைவேந்தல் நேற்று புதன்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப் பட்டு, மலர் தூவி, அக வணக்கத்துடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவுகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர் காண்டீபன், கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(02)

## காலாவதியான...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "பொருள் பட்டியலுக்கு அமைய, பாவனைக்கு உதவாத 4,844 சி எஸ் கண்ணீர்ப்புகை குண்டுகளும் , 4,992 கண்ணீர்ப்புகைக் கிரனைட்ஸ்களும் இருக்க வேண்டும்.

ஆனால், பொலிஸ் களஞ்சியசாலையில் 1,056 கண்ணீர்ப்புகை குண்டுகளே உள்ளன. அதிலும் குறிப்பாக 893 வும், 163 சி எஸ் கண்ணீர்ப்புகை குண்டுகளுமே பொலிஸ் களஞ்சியசாலையில் உள்ளன.

இதன்படி, எஞ்சியிருக்க வேண்டிய 3,951 சி எஸ் கண்ணீர்ப்புகை குண்டுகள் மற்றும் 4,829 கண்ணீர்ப்புகைக் கிரனைட்ஸ்கள் தொடர்பான தகவல்கள் இல்லை என்பது தேசிய கணக்காய்வு அறிக்கையின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

வாழைத்தோட்டம் மற்றும் நாரஹென்பிட்டி ஆகிய இரு பொலிஸ் நிலையங்களில் மொத்தமாக 871 கண்ணீர்ப்புகை குண்டுகள் காணப்படுகின்றன. இவைகள் 2004, 2005 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டவை.

இதன்படி "காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பொலிஸ் நிலையங்களில் உள்ளன. அவைகள் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன" எனவும் தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, காலாவதியான கண்ணீர்ப்புகை குண்டுகளை பொலிஸ ார் பயன்படுத்தியமையால் மூவர் இலங்கையில் உயிரிழந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் திகதி பிரதமர் அலுவலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற போராட்டம், கொழும்பில் ஜே.வி.பி போராட்டம், கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் இடம்பெற்ற போராட்டங்களில் பொலிஸாரின் கண்ணீர்ப்புகை பிரயோகத்தின்போதே இந்த மூவரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மூத்த அறிவிப்...

சொக்கநாதன் மறைவுக்குப் பலரும் சமூக ஊடகங்களின் வாயிலாக இரங்கல் தெரிவித்துள்ளனர்.

போர்க்காலத்தில் வடக்கு-கிழக்கு நிலைமைகள் பற்றிய செய்திகளை பி. பி.சியில் சிறப்பாகத் தொகுத்து வழங்கிய பெருமைக்குரியவர் அவர்.

விமல் சொக்கநாதன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெற்ற தனது நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஹரின், மனுஷ...

விக்கிரமசிங்க தலைமையில் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே ஐ.தே.கவை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதுடன், இருவரும் கட்சி செயற்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஹரின் பெர்னான்டோவும், மனுஷ நாணயக்காரவும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமித்ததையடுத்து , அவர்களின் கட்சி உறுப்புரிமை ஐக்கிய தேசியக் கட்சியால் நீக்கப்பட்டது.

இந்நிலையில் இருவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டதையடுத்து, அந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண் டதால் இவ்விருவரையும் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

## இந்திய ரூபாய்...

தற்போது பரவி வரும் தவறான கருத்துகளை தெளிவுபடுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயங்களாக வங்கித் தொழில் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் 2022 ஒகஸ்டில் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி இந்திய ரூபாயுடன் 16 நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்த 16 நாணயங்களை அங்கீகரித் ததன் முக்கிய நோக்கம் நாடுகளுக்கிடை யிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக்குவிப்பதாகும் என மத் திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

ஈழநாடு Eelanadu

# யாழ். பல்கலையினுள் திடீரென வந்த புத்தர்



யாழ்ப்பாணம், ஓக. 03

யாழ்.பல்கலைக்கழகத்தில், நேற்று போயா தினத்தை முன்னிட்டு பௌத்த கொடிகள் கட்டி, புத்தர் சிலை வைத்து வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வழமைக்கு மாறாக அதிகளவான பௌத்த கொடிகள் பல்கலைக்கழக வளாகத்தினுள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது அதனை பார்ப்பதற்கு கலைப்பீட தமிழ் மாணவர்கள் அங்கு சென்றனர். இதன்போது அங்கு வந்த ஒழுக்காற்று விசாரணை அதிகாரி விஜயேந்திரா மாணவர்களை அங்கு செல்லவேண்டாம் என தடுத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து விஞ்ஞான பீடத்தின் பின்புறத்தினூடாக புத்தர் சிலை எடுத்து வரப்பட்டது.

இதன்போது ஒரு கறுப்பு நிற மர்ம வாகனமும் பல்கலையினுள் நுழைந்தது.

இதன்போது அங்கு சென்ற கலைப்பீட தமிழ் மாணவர்களை அவ்விடத்திற்கு வந்த பிக்கு ஒருவர் காணொலி மற்றும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் புத்தர் சிலையை எடுத்து வந்த பெரும்பான்மையின மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் பெற்ற அனுமதிக் கடிதத்தைக் காண்பித்து, “நாங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அனுமதி பெற்றுத்தான் புத்தர் சிலையை கொண்டு வருகின்றோம்” என்றனர். (அ)

# பெரமுனவை பிரிப்பதே ஜனாதிபதியின் திட்டம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 03

பொதுஜன பெரமுனவை பிரிக்கும் வேலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று காலை ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு நேரத்தில் வெளியே வருவதற்கே பயந்த மொட்டு ராஜபக்ஷ அணியினர் தற்போது பகிரங்கமாகவும் சுதந்திரமாகவும் நடமாடுகின்றனர். இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க என்பவரைப் பற்றி அனைவருக்குமே நன்கு தெரியும். அவர் பிரித்தாழ்வதில் சிறந்தவர் என்பதும் தெரியும்.

தற்போது மொட்டுக் கட்சியில் ரணில் அணி தோன்றி இருக்கின்றது. பொதுஜன பெரமுனவுக்குள் இருக்கின்ற இளம் உறுப்பினர்கள் பலர் ரணிலின் பக்கம் திரும்பியிருக்கின்றனர். விசேடமாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டவர்கள் தற்போது ரணிலை ஆதரிப்பதற்குத் தயாராக இருக்கின்றனர். அத்துடன் அவருடன் இணைவதற்கும் தயாராக இருக்கின்றனர்.

மறுபக்கம் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தனது ஆதரவாளர்களுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றார். எனவே எதிர்வரும் காலங்களில் பல சம்பவங்களை எதிர்பார்க்கலாம். அவற்றினைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்-என்றார். (அ)

# ரணிலை பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ள சகலரும் தயார்!



## மனுஷ நாணயக்கார அறிவிப்பு

கொழும்பு, ஓக. 03

2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ள பல எதிர்க்கட்சிகளும் தயாராகிவருகின்றன என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலொன்றுக்கு நாடு தயாராகி வருகிறது. அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டாகும். நாட்டின் பெரும்பாலான கட்சிகளின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராக களமிறக்கப்படுவார்.

எதிர்க்கட்சில் உள்ள சிலர் வேண்டுமென்றால் வேறு வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்கலாம். அரசியல் நலன்களுக்கு அப்பால் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ள எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள்கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளனர்.

அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக இருக்கும். நாட்டில் ஜனாதிபதி வேட்பாளர்கள் அதிகளவாக உருவாகி வருகின்றனர். ஆனால், அதிக வாக்காளர்களை கொண்ட கட்சியான பொதுஜன பெரமுன மௌனமாகவே அந்த விடயத்தை கையாள்கிறது.

சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க, சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் என பலர் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்க அணிவகுத்து நிற்கின்றனர்-என்றார். (அ)

# உள்ளூர் பால் உற்பத்தி மீண்டும் உயர்வடைவு

கொழும்பு, ஓக. 03

நாட்டில் பால் கைத்தொழில் வீழ்ச்சியடைந்த போதிலும், உள்ளூர் பால் உற்பத்தி மீண்டும் அதிகரித்திருப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கடந்த ஆறு மாதங்களில் தேசிய கால்நடை மேம்பாட்டு வாரியம் பால் உற்பத்தியை 2,599,617 லீற்றராக அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 30 வீத அதிகரிப்பு என பால் உற்பத்தி நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போது, இலங்கையின் பால் உற்பத்தி 35-40 சதவீதமாக உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் இலங்கைக்குத் தேவையான திரவப் பால் உற்பத்தியில் 50 வீதத்தை நாட்டிலேயே உற்பத்தி செய்வதே அரசாங்கத்தின் நோக்காகும்.

இந்நிலையில்,நாட்டில் திரவ பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால்,பால் மா இறக்குமதியை நிறுத்துமாறு இந்த நிறுவனங்களின் அதிகாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

நாட்டுக்குத் தேவையான பாலில் 60 வீதம் இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் இருந்து பெறப்படுகிறது.

எவ்வாறாயினும், நாட்டில் திரவப் பால் உற்பத்தி அதிகரிப்பு தொடர்பில் விரைவில் அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்குமாறு மகிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# இத்தாலிக்கு செல்ல முயன்ற யாழ். தம்பதி கைது!

கொழும்பு, ஓக. 03

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இலங்கையைச் சேர்ந்த இளம் தம்பதியினர் குடிவரவு-குடியகல்வு அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.


சங்கானைப் பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் பயணப்பொதிகளைச் சோதனையிட்டபோது, பொய்யான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு கடவுச்சீட்டுகளும் போலி வீஸாவும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த யுவதியை சோதனைக்கு உட்படுத்தியபோது அவரது உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இத்தாலி வீஸாவுடன் கடவுச்சீட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தம்பதியினர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# யாழ்.-மன்னார்-முல்லைத்தீவை உள்ளடக்கி இரண்டாவது தென்னை முக்கோண வலயம்



கொழும்பு, ஓக. 03

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவை மையமாக கொண்டு வட மாகாணத்தில் இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

செப்ரெம்பர் 02 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக தென்னை தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவை மையமாக கொண்டு வட மாகாணத்தில் இரண்டாவது தென்னை முக்கோணத்தை ஆரம்பிக்க இருப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.